Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 1

வியாழக்கிழமை
27 நவம்பர் 2025

கார்த்திகை 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் –24
விலை – ரூபா 50



1985
2025

உங்கள் உதயன் 40 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து 41ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றான். இதுவரை காலமும் ஆதரவு நல்கிய வாசகர்கள்,நண்பர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள் அனைவருக்கும் சிரம்தாழ்ந்த நன்றிகளை அன்புரிமையுடன் உதயன் தெரிவித்துக்கொள்கின்றான்.

## மாவீரர்நாள் இன்று

# இயற்கைப் பேரிடருக்கு மத்தியிலும் நினைவேந்தலுக்குத் தாயகம் தயார்!

யாழ்ப்பாணம், நவம்பர் 27

தாயகக் கனவுடன் சமராடி, காவியமான மாற்றம் பெற்ற மாவீரர்களை – கல்லறை மேனியர்களை – ஈழத்தமிழர்கள் நினைந்துருகி அஞ்சலிக்கும் மாவீரர்கள் நாள் இன்றாகும். கொட்டும் மழைக்கு மத்தியிலும் இந்த நினைவேந்தலை முன்னெடுக்கத் தாயகம் தயாராக உள்ளது. 23



## பிரபாகரனின் பிறந்தநாள் தாயகத்தில் பேரெழுச்சி!

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 71ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் தமிழர் தாயகத்தின் பல்வேறு பகுதிகளில் எழுச்சியாகவும், உணர்வுபூர்வமாகவும் கொண்டாடப்பட்டது. தலைவர் பிரபாகரன் பிறந்து, சிறு வயதில் வாழ்ந்த 23

## அம்பாறையை நோக்கி நகர்கிறது தாழமுக்கம்

*கிழக்கில் வெள்ளப் பேரிடர் நிலை புயலாக மாறினால் பெயர் 'டித்வா'*

யாழ்ப்பாணம், நவ. 27

அம்பாந்தோட்டைக்கு தென்கிழக்காக 70 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் தற்போது தீவிர காற்றமுத்த நிலையாக மாற்றம்பெற்று அம்பாறையை நோக்கிநகரவுள்ளது. இது நாளைமறுதினம் முல் 23

போதைப் பாவனை

## எழுவருக்கு மறுவாழ்வு!

யாழ்ப்பாணம், நவ. 27

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டபகுதியில், போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான ஏழு பேரை மறு 23

## ஐஸ் போதையுடன் ஐந்து பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் நாவாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், ஐஸ் போதைப்பொருள்களைஉடமையில் வைத்திருந்த குற் 23

திருகோணமலையில்

## அத்துமீறிய பிக்குகளுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

திருகோணமலை, நவ. 27

திருகோணமலையில்அத்துமீறிபுத்தர்சிலையைப் பிரதிஷ்டை செய்த பிக்குவையும், அவருடன் இருந்தவர்களையும்விசாரணைக்குமுன்னிலையாகுமாறுதிருகோணமலைநீதவான்நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய திருகோணமலை ஸ்ரீ சம்புத்த ஜயந்தி போதிராஜ விகாராதிபதி கல் யாணவன்ஸ திஸ்ஸதேரர் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்ற விடயத்தை பொலிஸார் நீதிமன்றத்தின் 23



## உ/த பரீட்சை விடைத்தாள் ஹெலிகொப்டரில் காவுகை

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் இருந்து உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் நேற்று ஹெலிகொப்டர் மூலம் காவுகை செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவிலிருந்து பரீட்சைக்குத் தோற்றுவோரின் விடைத்தாள்கள் தினமும் கடற்படைப் படகுமூலமே 23

## காய்ச்சலால் சிறுவன் பலி

யாழ்ப்பாணம், நவ. 27

திடீர் காய்ச்சல் மற்றும் வலிப்பு ஏற்பட்டு சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். 23



முச்சந்தி முனி

"எங்கே எங்கே
ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்,
ஒருதரம் உங்கள்
திருமுகம் காட்டியே
மறுபடி
உறங்குங்கள்....!"

## உதயனில் இன்று குருதிக்கொடை!

## தமிழினத்தின் இறைவனான பிரபாகரனுக்கு வாழ்த்துக்கள்!

*ரவிகரன் எம்.பி. முழக்கம்!*

கொழும்பு, நவ. 27

தமிழினத்தின் இறைவனான மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள் இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன். நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் மேலும் தெரி 23

## குருதிக்கொடை முகாம்களுக்கு புலனாய்வுப் பிரிவினர் கெடுபிடி!

யாழ்ப்பாணம், நவ. 27

வல்வெட்டித்துறையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரனின் பிறந்தநாளை முன்னிட்டு, குருதிக்கொடை முகாமை முன்னெடுத்தமை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்க தலைவர் பா.வீரசுரேந்திரன் தெரிவித்ததாவது: வல்வெட்டித்துறை மண்ணின் மைந்தர்களது ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஊடாக 23

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4267 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 10 26 58 68 |
| விசேட எழுத்து | C |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1334 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 07 28 55 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0293 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 5 2 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2373 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 03 24 33 34 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6025 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 1 9 5 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2055 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 71 74 78 82 |
| விசேட எழுத்து | V |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0600 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 1 9 5 3 |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 26.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0141 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 40 60 |

# நடப்பாண்டில் 4,131 பேர்
# ஆசிரிய சேவைக்கு உள்ளீர்ப்பு

**கொழும்பு,நவ.27**

**கல்வியியல் கல்லூரியிலிருந்து வெளியேறியுள்ள 4,131 பேர் இந்த ஆண்டில் ஆசிரிய சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று தொழில் பிரதியமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் கல்வி நிர்வாக சேவைக்கு இந்த ஆண்டு 502 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அதேபோல் ஆசிரியர் கல்விச் சேவைக்கு 580 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

கல்வியியல் கல்லூரியிலிருந்து வெளியேறியுள்ள 4ஆயிரத்து 131 பேர் இந்த ஆண்டு ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தல் இந்த மாதம் வெளியிடப்பட்டது. ஆகவே அதிபர் சேவையில் நிலவும் வெற்றிடப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் 2023.01.27 ஆம் திகதி வெளியிடப்பட்டு, விண்ணப்பம் கோரப்பட்டது.

2023.03.25 ஆம் திகதி போட்டிப்பரீட்சை நடைபெறவிருந்த நிலையில் அதற்கு முன்னர் இந்த வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் 04 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் தற்போது நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வு பெற்றுக் கொடுப்போம்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை | 0733 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| X | 9 2 0 6 9 6 |

**Super Ball** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2999 | R | 03 65 75 78 |

**சனிதா** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| B | 01 06 33 61 | 5160 |

**SASIRI** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0829 | 10 14 16 |

**லக்ன ராசி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 08 21 43 62 | 4711 |

**KAPRUKA** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| S | 36 | 08 24 29 37 | 2175 |

**அத கோடிபதி** DLB

| திகதி | தினம் |
|---|---|
| 26.11.2025 | புதன்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 07 50 60 69 | 2825 |

## இலங்கைக்கு வருகின்றார் இந்திய இராணுவத் தளபதி

**கொழும்பு,நவ.27**

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி எதிர்வரும் டிசெம்பர் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் இரண்டு நாள் பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே உயர்மட்ட இராணுவ ஈடுபாடுகள் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பரஸ்பர நம்பிக்கை, மூலோபாய சீரமைப்பு மற்றும் வளர்ந்து வரும் செயற்பாடுகள் ஆகியவற்றை இந்தப் பயணம் வலுப்படுத்தும் வகையில் அமையவுள்ளதாக, இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் சொத்துகள் சேதம் பாகுபாடின்றிச் சட்டம் பாயும்!

## அமைச்சர் நளிந்த சீற்றம்

**கொழும்பு,நவ.27**

**வாழைச்சேனையில் தொல்பொருள் திணைக்களத்தின் அடையாளப் படுத்தல் பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்ட சம்பவம் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாகவே கருதப்படும். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் எவ்வித பாகுபாடும் இன்றி சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொதுச் சொத்துகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் தொடர்பில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக் குடி, வாழைச்சேனை மற்றும் செங்கலடி நீதவான் நீதிமன்றங்களில் பொலிஸாரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கோரளைப்பற்றுப் பிரதேசசபையின் ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நாட்டின் எந்தப் பிரதேசத்தில் தொல்பொருள் ஸ்தானங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றாலும் அவற்றுடன் தொடர்புடையவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எந்தச் சட்டத்தின்கீழ் வழக்குத் தாக்கல் செய்வது என்பது பொலிஸாரால் தீர்மானிக்கப்படும். எந்தவகையிலும் இது போன்ற செயற்பாடுகளுக்குத் தளர்வுகள் வழங்கப்படமாட்டாது. இவை மீண்டுமொரு முறை இடம்பெறக்கூடாத செயற்பாடுகளாகும் -என்றார். (ச-இ)

# அதிகூடிய மழைவீழ்ச்சி அச்சுவேலியில் பதிவு!


யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சி அச்சுவேலியில் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலத்தில் அச்சுவேலியில் 63.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

குறித்த காலப் பகுதியில் யாழ்.நகரில் 24.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தொல்புரத்தில் 21 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 19.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 09.02 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்குள் யாழ். மாவட்டத்தில் அச்சுவேலியில் நான்கு தடவைகள் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-66)



# நடப்பாண்டில் துறைமுக அதிகாரசபைக்கு ரூ.39 பில்லியன் வருவாய்

கொழும்பு,நவ.27

துறைமுக அதிகாரசபை இந்த ஆண்டின் ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையில் 39 பில்லியன் ரூபா வரியின் பிந்திய நிகர இலாபத்தைப் பதிவு செய்துள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டின் வரியின் பிந்திய நிகர இலாபத்துடன் ஒப்பிடுகையில் சுமார் 12 பில்லியன் ரூபா அதிகரிப்பைக் குறிக்கிறது. (ச-இ)



# உரும்பிராயில் விபத்து; இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த வீதி விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலாலி வீதியூடாக முச்சக்கரவண்டியில் பயணித்தவர் எதிர்ப்பக்கமாக வாகனத்தைத் திருப்பியபோது பின்பக்கமாக அதி வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் முச்சக்கரவண்டியுடன் மோதுண்டதில் விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் முச்சக்கரவண்டி வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஏழாலை மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் காயமடைந்தநிலையில் கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-66)

# வட்டுக்கோட்டையில் இருவர் ஐஸ் போதையுடன் கைது

யாழ்ப்பாணம்,நவ.27

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரு வெவ்வேறு இடங்களில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூளாய் வேரம் பகுதியில் 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருள்களை விற்பனை செய்பவர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன் பொன்னாலை தெற்கு, சுழிபுரம் பகுதியில் 24 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் 2 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

**சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின்பின் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-27)**




## சப்பாத்துச் சரியில்லை

**எல்லாருக்கும் முன்னால குடுக்கிறமாதிரிக் குடுத்திட்டு அதைப் பின்பக்கமாப் பறிக்கிறது சிலருக்குக் கைவந்த கலை. அப்பிடியொரு வேலையைத்தான் இந்தத் திசைகாட்டி அரசாங்கமும் செய்யுது. இதுக்கு முதல் இருந்த அரசாங்கங்கள் எல்லாமே மாவீரர் தினமெண்டால் ஏதோ பேய் பிசாசைக் கண்டதைப் போல அலறித்துடிச்சு, அதை நிப்பாட்டிறதிலதான் முழுமூச்சா இருந்தவை. அவையளோட ஒப்பிடேக்க திசைகாட்டிக்காரர் பரவாயில்லைத்தான். "செத்தவையை நினைவேந்திறதுக்கு எல்லாருக்கும் உரிமை இருக்கு. ஆனால் புலியளை நினைவேந்த ஏலாது" எண்டு அவை அறிவிச்சவை. ஆனால் மாவீரர்நாள் எதுக்குச் செய்யிறம் எண்டது அவைக்கு விளங்கேலையோ இல்லாட்டி விளங்காதமாதிரி நடிக்கினமோ தெரியேலை. எப்பிடி இருந்தாலும் மாவீரர்நாளைத் தடைசெய்யோணும் எண்டு நீதிமன்றத்தில போய் தடை வாங்கின காலத்துக்கு திசைகாட்டி அரசாங்கம் முற்றுப்புள்ளி வைச்சிருக்கு. எண்டாலும், "நாங்கள் செத்தவையை அஞ்சலிக்கத் தடைபோடமாட்டம்" எண்டு சொல்லிப்போட்டு, இப்ப சில இடங்களில நொண்டிச் சாட்டுகளைச் சொல்லி, வழக்குப் போடப்போறம், கைது செய்யப்போறம், இப்பிடி நினைவேந்தல் செய்யேலாது எண்டு பொலிஸ்காரர் வந்து வெருட்டுகினமாம்.**

**வடமராட்சி,பொலிகண்டியில மாவீரர்களின்ர படம் வைச்சு அஞ்சலி செய்தவை. "இயக்கத்தின்ர வரிப்புலி உடுப்புப் போட்ட மாவீரர்களின்ர படம் வைக்கக்கூடாது, சிவில் உடுப்போட தான் அவையின்ர படம் இருக்கோணும்" எண்டு பொலிஸ் முதலே அவைக்குச் சொன்னதாம். அதால மாவீரர்கள் சிவில் உடுப்போட இருக்கிற படத்தைத்தான் அவையள் வைச்சு, சோடிச்சு, அஞ்சலி செய்திருக்கினம். ஆனால் அங்க அஞ்சலி செய்யிறது பொலிஸ்காரருக்கு துண்டறப் பிடிப்பில்லை. என்ன செய்து இதைக்குழப்பலாம்? எண்டு ரூம் போட்டு யோசிச்சும் ஒரு காரணமும் பிடிபடேலை. கடைசியில முட்டையில மயிர் பிடுங்கிறமாதிரி ஒண்டைக் கண்டுபிடிச்சிருக்கினம். மாவீரர்கள் சிவில் உடுப்போட இருந்தாலும், அவை போட்டிருக்கிற சப்பாத்து மட்டும் இயக்கம் போடுற சப்பாத்து மாதிரி இருக்காம் எண்டு சொல்லி அந்தப் படத்தை எடுக்கச் சொல்லி பொலிஸ் வெருட்டி இருக்குது.**

**அந்தப் படத்தை வைச்சவையும் எவ்வளவோ வாதாடிப் பாத்தினம். "சேர், சப்பாத்தில என்ன இருக்கு. ஆமிக்காரரும் இப்பிடிச் சப்பாத்துதானே போடுறவை. நீங்கள் புலியளை நினைவுபடுத்திற விசயங்கள் தானே இருக்கக்கூடாது எண்டீங்கள். இப்பவந்து சப்பாத்துச் சரியில்லை எண்டு பிழை சொல்லுறியள்" எண்டும் சொல்லிப் பாத்தினம். ஆனால் பொலிஸ்காரரோ விடாக்கண்டர்மாதிரி "இந்தப் படத்தை எடுக்கோணும், இல்லாட்டி நீங்கள் இதில மாவீரர் தினம் செய்யேலாது" எண்டு ஒற்றைக்காலில நிண்டதால, வேற வழியில்லாமல் நிகழ்வை ஏற்பாடு செய்தவை படத்தை அதில இருந்து தூக்கிட்டினம். மாவீரர் தினத்தை செய்ய விடுறமாதிரி விட்டுப்போட்டு, இப்பிடி அஞ்சுசதத்துக்கும் பெறுமதியில்லாத காரணங்களைச் சாட்டி குழப்ப வெளிக்கிடுறது அரசாங்கத்தின்ர ரட்டை முகத்தைத் தான் காட்டுது கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய ராசிபலன்

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள்மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். வீட்டில் குடும்பத்தினருடன் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றி நிம்மதி பெறுவீர்கள்.

**மிதுனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதரவகையில் எதிர்பாராத சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**சிம்மம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். நண்பர்களின்மூலம் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்பட வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்கு சிறிய அளவில் கடன் வாங்கநேரிடும்.

# ஞானச்சுடர் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.27

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் 335ஆவது கார்த்திகை மாத மலர் வெளியீடும், கௌரவிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் மூத்த ஊடகவியலாளர் சி.தில்லைநாதன் மலரின் வெளியீட்டுரையையும், ஓய்வுநிலை அதிபர் செ.பரமேஸ்வரன் மலரின் மதிப்பீட்டுரையையும் ஆற்றவுள்ளனர். கௌரவிப்பு விழாவாக அமெரிக்காவில் விருது பெற்ற பிரபல நாதஸ்வர வித்துவான் நல்லூர் சு.பாலமுருகன் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சார்பில் கௌரவிக்கப்படவுள்ளார். (ச-66)

# 'மேகம் கவிந்த தாரகை'
## இலவசத் திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,நவ.27

வங்காளத் திரைப்பட மேதை 'றித்விக் கடக்' கின் நூற்றாண்டு நினைவாக, அவரது 'மேகம் கவிந்த தாரகை' திரைப்படம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிறு 3.30 மணிக்குத் திரையிடப்படவுள்ளது. இல. 18/2, அம்மன் வீதி, கந்தர்மடம்,யாழ்ப்பாணத்திலுள்ள 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் நடைபெறும் இந்த இலவசக் காட்சியை யாழ்ப்பாணத் திரைப்படக்கழகம் ஒழுங்கு செய்துள்ளது. (ச)

# வெள்ளத்தில் மூழ்கிய காரைநகர் வீதி!

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்ப்பாணம் - காரைநகர் மேற்கு வீதி வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் மக்கள் மிகச் சிரமத்தின் மத்தியில் பயணித்துவருகின்றனர். காரைநகரின் மிக முக்கியமான வீதியான குறித்த வீதியூடாகவே சுற்றுலாப்பயணிகள் அதிகம் செல்கின்றனர். அத்தோடு வெள்ள நீர் தேங்கியுள்ள இந்த வீதியின் அருகில் வங்கிகள், மருத்துவமனை, பாடசாலை, தபால் நிலையம் ஆகியன அமையப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# 'உணர்வின் மலர்கள்' பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.27

சர்வதேச மாற்று வலுவுள்ளோர் தினத்தை முன்னிட்டு சரசாலையூர் கி. கலைதாசன் எழுதிய 'உணர்வின் மலர்கள்' பாடல் இசை வெளியீடு எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு மட்டுவில் கமலாசனி வித்தியாலய சுப்பையா அரங்கில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வி. சந்திரகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் எவ். சீ. சத்தியசோதியும் சிறப்பு விருந்தினராக மாவட்ட கலாசார அலுவலர் இ. கிருஷ்ணகுமார் மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் அலுவலர் திருமதி விஜயகுமாரி முகுந்தன், தென்மராட்சிப் பிரதேச மாற்று வலுவுள்ளோர் சங்கத் தலைவர் இ. அ. ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொள்வர். (ச-9)


# மறுஅறிவித்தல்வரை கடலுக்குச் செல்லாதீர்

கொழும்பு,நவ.27

சீரற்ற வானிலை காரணமாக மறு அறிவித்தல் வரையில் மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வது இடை நிறுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த ஆபத்தான சூழலில் தற்போது கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து மீன்பிடிப் படகுகளும் கரைக்குத் திரும்புமாறும் அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்கால அறிவிப்புகள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரண்டாம் கார்த்திகைச் சோமவார உற்ச வம் பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-66)

# படகு கவிழ்ந்து ஒருவர் சாவு!

மட்டக்களப்பு,நவ.27

பாலகுடா களப்பில் படகு கவிழ்ந்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் உயிரிழந்தவர் பாலகுடாப் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞராவார். படகின் இயந்திரத்தை பழுதுபார்த்து, அதனைப் பரிசோதனை செய்யச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கற்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




மரநடுகை மாதம் (நவம்பர்)

"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்கவேண்டும். !"

– தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதி)–


## தாயகக் கனவோடு...

இன்று மாவீரர் நாள். தமிழர்களின் உரிமைகளையும், அவர்களின் சுயநிர்ணய உரிமைகளையும், அரசியல் வேணவாக்களையும், சுதந்திரமான வாழ்வையும் வலியுறுத்தி வித்தாகிப்போன மாவீரர்களின் கல்லறைகள் கண்ணீரால் கழுவப்படும் நாள். இவ்வாறான ஒரு நாளிலேயே, தமிழரின் உரிமைக்காக உதயன் பேனாவைக் கையிலெடுத்தான். காலச் சக்கரம் மிக வேகமாகச் சுழன்றிருக்கின்றது. இன்று உங்களின் உதயனுக்கு வயது 41.

'அரசியல், பொருளாதார சுதந்திரம் மலர வேண்டும். சமூக சமத்துவமும் சகோதரத்துவமும் பூத்துக் குலுங்க வேண்டும். ஈழம் வாழ் தமிழ் மக்கள் உலகின் ஏனைய பகுதி மக்களுக்கு இணையாக உயர வேண்டும். அதற்கேற்ற அபிவிருத்தியும் உழைப்பும் இந்தப் பூமியில் செறிந்து பரவ வேண்டும். எங்களிடம் உள்ள கல்வி, மனிதசக்தி முதலான பல்துறை ஆற்றல்களையும் ஒருமுகப் படுத்தவேண்டும். சொந்த மண்ணின் வளங்களைக் கண்டறிந்து அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டும். எமது வருங்காலச் சந்ததிச் செல்வங்கள் வேலைவாய்ப்புக்கும் ஜீவனத்துக்கும் கொழும்பையும் பிறநாட்டுத் தலைநகரங்களையும் நாடாதிருக்கச் செய்ய வேண்டும். தமிழர் தமது பிறந்த மண்ணில் சகல உரிமைகளுடனும் வசதிகளுடனும் முதலாந்தர பிரஜைகளாக வாழ வேண்டும். தம்மைத் தாமே ஆண்டு தமது பணிகளைத்தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும். இதுவே உதயனின் ஆசையும் விருப்பமும். தமிழ்ப் பெருமக்கள் இதனை ஈட்டுவதற்காக உதயன் தன்னை அர்ப்பணம் செய்வான். அந்த அர்ப்பணமே அவனது உதயநாள் சங்கற்பம்' என்று தனது உதயவேளையில் உதயன் உறுதிபூண்டான்.

அவன் வரித்துக்கொண்ட இலட்சியத்துக்காக இலக்குக்காக இன்று வரையில் இம்மியும் பிசகாது 'துளியளவும் விட்டுக்கொடாது' உறுதியுடன், வலிமையுடன் கருத்துச் சமராடிக் கொண்டிருக்கின்றான். உதயன் நெருப்பாறுகளைக் கடந்தே வந்திருக்கின்றான். இன்னமும் எரிமலையாய் கொதித்துக் கொட்டிக்கொண்டிருக்கும் அந்தத் தணல்களுக்கு மேலாகவே அவன் பயணித்துக் கொண்டிருக்கின்றான். இவை சுயதம்பட்டம் அல்ல. மீளப் பெறமுடியாததும், நிகர் செய்யப்படாததுமான இழப்புகளை உதயன் இன்றும் சந்தித்துக் கொண்டிருப்பதற்கு இதுவே காரணம். அடித்தார்கள், உதைத்தார்கள், எரித்தார்கள், சுட்டும் கொன்றார்கள், வழக்குகளும் போட்டுப் பார்த்தார்கள் ஆனால் உதயனின் பயணத்தை எவராலும் நிறுத்த முடியவில்லை. தடைகள் எல்லாம் படிகளாக மாறியது உங்கள் ஆதரவினால் மாத்திரமே. ஒவ்வொரு தடைகளின்போதும், பிரச்சினைகளின் போதும் மக்கள் உதயனை விட்டு ஒருபோதும் விலகவில்லை. மாறாக இறுகப்பற்றியிருக்கின்றார்கள். ஆதலால், என்றென்றும் உங்களுக்கு உதயன் நன்றியுடையவன்.

'தமிழர்கள் தம்மைத்தாமே ஆண்டு, தமது பணிகளைத் தாமே நிர்வகித்து அன்னை மண்ணின் வளம் காணுதல் வேண்டும்' என்று உதயநாள் சங்கற்பத்தில் உறுதிபூண்டதை அடைவதற்காக உதயன் என்றும் உழைப்பான். அவனுக்கு எப்போதும், களமாடி வீரகாவியமான எங்கள் வீரர்கள்- பேனாப் போராளிகள் தம் ஆசிகளை வழங்குவார்கள்.



## போதைக்கு அடிமையானோர் மறுவாழ்வுக்கு வேலைத்திட்டம்

### தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்பு



**கொழும்பு,நவ.27**
**போதைக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வுக்கான முறையான அறிவியல் வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார். போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்ட தேசிய வழிநடத்தல் குழுவின் இரண்டாவது அமர்வு ஜனாதிபதி செயலகத்தில் கூடியபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருந்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு குறித்து சமூகத்தில் பல்வேறு கருத்துகள் இருக்கின்றன.

அவை சில நேரங்களில் முரண்பாடாக இருப்பதாகவும், அந்தக் கருத்துகள் அனைத்தையும் இணைத்து அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு புதிய வேலைத்திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து தொடர்புடைய நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு அறிவியல் வழிமுறையை உருவாக்கவேண்டும். தற்போது திட்டமிடப்பட்டுள்ளபடி, பகுப்பாய்வாளர் துறையில் வெற்றிடமாகவுள்ள பகுப்பாய்வாளர் பதவிகளை நிரந்தர மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அவசரமாக எடுக்கவேண்டும்- என்றார். (ச-இ)

## மண்சரிவு எச்சரிக்கை


கொழும்பு,நவ.27
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பல மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பதுளை, காலி, மாத்தறை, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கொத்மலை நீர்த்தேக்கம் வான்கதவு திறப்பு

கொழும்பு,நவ.27
மலையகத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்துவருகின்றநிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஒரு வான் கதவு திறக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் நிலவும் மழையுடனான வானிலையை அடுத்தே வான் கதவு திறக்கப்பட்டுள்ளதாக, கொத்மலை நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் மற்றும் நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## வீதி விபத்துகளால் ஒரேநாளில் ஐவர் பலி

கொழும்பு,நவ.27
நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விபத்துகளில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்துகளுடன் தொடர்புடைய அனைத்துச் சாரதிகளும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அந்தந்தப் பொலிஸ் நிலையங்களால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-இ)



## வெளிநாட்டுசிகரெட்டுகளுடன் வர்த்தகர்கள் மூவர் கைது!

கொழும்பு,நவ.27
ஒரு கோடி 78 இலட்சம் ரூபா மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மூன்று சந்தேகநபர்களும் விமானநிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு வந்தவர்கள் என தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களின் பொதிகளில் இருந்து 119,000 பிளாட்டினம் வகை சிகரெட்டுகள் அடங்கிய 595 சிகரெட் அட்டைப் பெட்டிகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை – கார்த்திகை 8
28.11.2025
சுபநேரம் : 09.11 - 10.41
ராகுகாலம் : 04.41 - 06.11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 - 11 - 1934

மறைவு 26 - 11 - 2025

## குமாரசாமி ஈஸ்வரி

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாக கொண்ட குமாரசாமி ஈஸ்வரி அவர்கள் நேற்று (26.11.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்புத் துணைவியாரும், Dr. ராஜ்குமார், பிரபாகரன், அமரர் பிரமிளா மற்றும் சிவகுமார் (காணி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-11-2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்-துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 069 8105

இல 120/5, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(CR/46560) J-1

# கண்ணீர் அஞ்சலி

யாழ் வணிகர் கழகத்தின் கணக்காளராகிய
**திரு. இ.வாமதேவன்**
அவர்களின் அன்புத் தாயார்


**அமரர் சுந்தரலட்சுமி இராமசாமி ஐயர்**

அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரடைவதுடன்,
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் வணிகர் கழகம்

# மரண அறிவித்தல்



**வைத்தியர் ஸ்ரனிஸ்லாஸ் சாள்ஸ் திருக்குமாரன்**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு குமரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியர் ஸ்ரனிஸ்லாஸ் சாள்ஸ் திருக்குமாரன் அவர்கள் கடந்த (24.11.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் பேதுறுப்பிள்ளை - சந்தியாப்பிள்ளை (பாக்கியம் வைத்தியசாலை)-மேரி திரேசா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் குமாரசாமி - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், தனேஸ்வரி (இளைப்பாறிய உப அதிபர், கோப்பாய் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், திலீப்குமார், சரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் குமுதினி, சுகிர்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷரா, ஆகர்ஷன், ஆயுஷன், ஆரவ்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், தவராசா, மேரி மக்டலீன், ரவீந்திரன் மற்றும் காலஞ்சென்றவர்களான பமீலா, பவ்வீரியஸ் ஜெயகுமாரன், வசந்தகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரதாசன், பஞ்சதாசன், கமலேஸ்வரி, நாகேஸ்வரி, ஆனந்தீஸ்வரி, குமரேஸ்வரி, குகதாசன், கொங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.11.2025) வெள்ளிக்கிழமை காலை 8:00 மணி முதல் 12:00 மணி வரை ஈ - சன்ஸ் அந்தியகாலச் சேவை, இலக்கம் 148, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தொடர்ந்து யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 03.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# லண்டனில் நடந்தது போலி ஆர்ப்பாட்டம்

## விமல் வீரவன்ஸ கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ.27

மாவீரர் தினத்தை நினைவுகூர இடமளிக்கப்பட்டுள்ள நிலையில் அதை மூடி மறைக்கும் நோக்கிலேயே லண்டனில் போலி ஆர்ப்பாட்டம் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கலாம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு எதிராக லண்டனில் புலம்பெயர் தமிழர்கள் சிலர் நடத்திய போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அந்தப் போராட்டத்தையடுத்து புலிகளின் எதிர்ப்புக்கு ஜே.வி.பி. அரசாங்கமும் ஆளாகிவிட்டதென சிலர் நினைக்கலாம். இது கொள்கை தொடர்பான எதிர்ப்பு அல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் காசு வாங்கும்போது, வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கலாம். மறுபுறத்தில் தொல்லியல் திணைக்களத்தின் பெயர்ப் பலகைகள் அகற்றப்படுகின்றன. மாவீரர் தினத்தை நினைவுகூர இடமளிக்கப்படுகின்றது. எனவே, இதனை மூடிமறைப்பதற்காக போலி ஆர்ப்பாட்டம் உருவாக்கப்பட்டிருக்கலாம்-என்றார். (எ-44)

# ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்.
# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் -03 சந்தை தெற்கு வீதி, ஆதன இலக்கம் 14/6 பிரதேச சபைப் பதிவேடுகளில் Mrs.R.Kanagasundaram and R.Ratnam எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தின் ஒரு பகுதியை மனோகரன் மகள் வினோதினி எனும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாதனமானது பிரசித்த நொத்தாரிசு கு. விசுவலிங்கம் அவர்களால் 2014.06.07ஆம் திகதி 5586ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் மனோகரன் கைம்பெண் கலாவதி என்பவரால் மகோகரன் மகள் வினோதினி எனும் பெயரிற்கு வழங்கப்பட்டுள்ளது. இது வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, J/198 கிராம சேவகர் பிரிவு, உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, "கப்பல் வளவு" நிலப்பரப்பு 01, குளி 01.50, இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.Balendran அவர்களின் 2014/1/108ஆம் இலக்க 28.05.2014ஆம் திகதிய படத்தில் துண்டு-05 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக கிழக்கு - கார்த்தி இளையப்பாவின் ஆதனம், வடக்கு துண்டு-04 காமினிக்குரியது, மேற்கு - துண்டு 02, பாதை நிலம், தெற்கும் துண்டு 06 இதடங்கலும் துண்டு - 02 பாதை நிலத்தில் பங்கும் பாவிப்பும் துண்டு 1,3,4,5,6 க்கு துண்டு-02 பாதையில் பங்கும் பாவிப்புரித்தும் புறநீங்கலாக என உள்ளது.

இவ்வுறுதியில் இதற்கு முட்பட்ட உறுதியாக 2013.09.28ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் அவர்களால் எழுதப்பட்ட 5059ஆம் இலக்கம் கொண்ட அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுறுதி அறுதி வகையாக உள்ள போதிலும் தாயுறுதிகள் எதுவும் குறிப்பிடப்படாது வெளிப்படுத்தல் தன்மையாக உள்ளது. இது வெல்லம்பிட்டி, ஊறுகொடவத்த, இல-132ஏ அவிசாவளை றோட் காளிமுத்து இராமச்சந்திரன் என்பவரால் சுன்னாகம், செல்லாச்சி அம்மையார் வீதி, மனோகரன் கைம்பெண் கலாவதி என்பவரிற்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியில் இவ்வாதனமானது எனது பெயரில் 1958ஆம் ஆண்டு அறுதியுறுதி முடிந்ததென்றும் கடந்த கால வன்செயல்களின் போது, இடம்பெயர்ந்து சென்றபோது குறித்த உறுதி தொலைந்துவிட்டதென்றும் யாழ்ப்பாண காணிப்பதிவகத்திலும் தேடுதல்கள் செய்தும் மீளப்பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும், கடந்த 55வருடங்களாக எனது சொந்தமும் நிந்தமும் ஆட்சியும் உடையதென்றும் இவ்வாறு ஒரு அறுதி உறுதிமுடிக்க எனக்கு போதிய உரித்தும் தத்துவமும் உண்டு எனவும் காளிமுத்து இராமச்சந்திரன் என்பவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாதனத்தை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக ஆதன வரிப் பதிவேடுகளில் மனோகரன் மகள் வினோதினி என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் சட்டரீதியான உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் எழுத்து மூலம் தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மனோகரன் மகள் வினோதினி எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய சட்ட ரீதியான பிசகுகள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பேற்கமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

27.11.2025

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 • 11 • 1939

மறைவு 10 • 11 • 2025



## அமரர் கருணைபூஷணி கனகசுந்தரம்

எம்மை நல்வழி நடாத்திய எங்கள் குடும்பத்தலைவி அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டதும் உடன் வந்து உதவி செய்ததோடு, மரணச் சடங்கிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் மூலம் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாக அனுதாப செய்திகளை பகிர்ந்தவர்களுக்கும் மலர்வளையங்கள் சாத்தியும் மலர்மாலைகள் அணிவித்தும் நேரில் கலந்து பிரார்த்தனை செய்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளை மனமுவர்ந்து இத்தால் நவில்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.11.2025 வெள்ளிக் கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30.11.2025 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

சுதுமலைச் சந்தியடி
நாவலடி வீதி
மானிப்பாய்

இங்ஙனம்
குடும்பத்தினர்

(CS 30802) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புதுக்குடியிருப்பில் மாவீரர்தின நிகழ்வு

முல்லைத்தீவு,நவ.27

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரப்பகுதியில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றுள்ளது.

மூன்று மாவீரர்களின் தாயார் ஒருவர் மாவீரர்களின் பொதுப் படத்துக்கான பொதுச்சுடரினை ஏற்றி வைக்க தொடர்ந்து மாவீரர்கள் நினைவாக சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி நடைபெற்றது.

மாவீரர் நினைவான உரைகள் கவிதை, நடனம் என்பன இடம் பெற்று மாவீரர்களின் பெற்றோருக்கு உலர் உணவுப் பொதிகளும் மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-19)





பூநகரிப் பிரதேச மாவீரர் தின நிகழ்வு பிரதேச மாவீரர் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. முன்னாள் அரசியல்துறை போராளியான தமிழரசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-214)



## மானிப்பாயில் மாவீரர் நிகழ்வு


யாழ்ப்பாணம்,நவ.27

மண்ணுக்காக தமை ஈந்த மாவீரர்களின் நினைவில்அவர்களின் பெற்றோர் உரித்துடையவர் மதிப்பளிக்கும் நிகழ்வு மானிப்பாயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினர் கலொக் கணநாதன் உஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சபையின் தவிசாளர் ஜெசீதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், பிரதேசசபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ச-27)



மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் குருதிக்கொடையும் மரக்கன்று வழங்கலும் நேற்றுமுன்தினம் நாகர்கோவில் குருகுலம் சனசமூகநிலையத்தில் இடம்பெற்றது. ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிதிப்பங்களிப்பில் வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த இரத்த தான முகாம் முன்னெடுக்கப்பட்டது. (ச-27)







## சமத்துவக் கட்சியால் மாவீரர் தின நிகழ்வு

கிளிநொச்சி,நவ.27

மாவீரர்தின நிகழ்வுகள் சமத்துவக் கட்சியின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பூநகரி வாடியடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் செயலாளர் நாயகமுமான முருகேசு சந்திரகுமார், மதத்தலைவர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது மாவீரர்களின் பெற்றோருக்கு அன்பளிப்புப் பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-55)



மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர் பெற்றோர் உரித்துடையோர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச மாவீரர் செயற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம் பெற்றது. இதன்போது கலை நிகழ்வுகளும் மாவீரர்களின் வீரம் தியாகம் அர்ப்பணிப்பு தொடர்பிலான நினைவுரைகளும் இடம்பெற்றதுடன் பெற்றோர் மதிப்பளிக்கப்பட்டு அவர்களுக்கான நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன. (ச)



மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் உள்ள மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு மூதூரில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தின் ஏற்பாட்டில் மாவீரர் குடும்பங்களுக்காக உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்.
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, உப அலுவலகம், சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம், உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் - 03 சந்தை தெற்கு வீதி, ஆதன இலக்கம் 14/6 பிரதேச சபைப் பதிவேடுகளில் Mrs.R.Kanagasundaram and R.Ratnam எனும் பெயரில் அமைந்துள்ள ஆதனத்தின் ஒரு பகுதியை செல்வராசா கஜீந்தன் மனைவி மேகலா எனும் பெயரில் ஆதனப் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாதனமானது பிரசித்த நொத்தாரிசு கு.விசுவலிங்கம் அவர்களால் 2014.06.07ஆம் திகதி 5585ஆம் இலக்க சீதன உறுதி மூலம் மனோகரன் கைம்பெண் கலாவதி என்பவரால் செல்வராசா கஜீந்தன் மனைவி மேகலா எனும் பெயரிற்கு வழங்கப்பட்டுள்ளது. இது வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, J/198 கிராம சேவகர் பிரிவு, உடுவில் கோவிற்பற்று சுன்னாகம் இறை, "கப்பல் வளவு" நிலப்பரப்பு 01, குளி 04.50, இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.Balendran அவர்களின் 2014/1/108ஆம் இலக்க 28.05.2014ஆம் திகதிய படத்தில் துண்டு - 06 எனக்காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகளாக கிழக்கு - கார்த்தி இளையப்பாவின் ஆதனம், வடக்கு துண்டு - 05 வினோதினியின் ஆதனம், மேற்கும் - துண்டு இரண்டு பாதை நிலம், தெற்கும் - செல்லாச்சி அம்மையார் விதி இதடங்கலும் துண்டு - 02 பாதையில் பங்கும் பாவிப்பும் துண்டு 1,3,4,5,6 க்கு துண்டு - பாதையில் பங்கும் பாவிப்புரித்தும் புறநீங்கலாக என உள்ளது.

இவ்வுறுதியில் இதற்கு முட்பட்ட உறுதியாக 2013.09.28ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் அவர்களால் எழுதப்பட்ட 5059ஆம் இலக்கம் கொண்ட அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுறுதி அறுதி வகையாக உள்ள போதிலும் தாயுறுதிகள் எதுவும் குறிப்பிடப்படாது வெளிப்படுத்தல் தன்மையாக உள்ளது. இது வெல்லம்பிட்டி, ஊறுகொடவத்த, இல - 132ஏ அவிசாவளை றோட் காளிமுத்து இராமச்சந்திரன் என்பவரால் சுன்னாகம், செல்லாச்சி அம்மையார் வீதி, மனோகரன் கைம்பெண் கலாவதி என்பவரிற்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியல் இவ்வாதனமானது எனது பெயரில் 1958ஆம் ஆண்டு அறுதியுறுதி முடிந்ததென்றும் கடந்த கால வன்செயல்களின் போது இடம்பெயர்ந்து சென்றபோது குறித்த உறுதி தொலைந்துவிட்டதென்றும் யாழ்ப்பாண காணிப்பதிவகத்திலும் தேடுதல்கள் செய்தும் மீளப்பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும், கடந்த 55 வருடங்களாக எனது சொந்தமும் நிந்தமும் ஆட்சியும் உடையதென்றும் இவ்வாறு ஒரு அறுதி உறுதிமுடிக்க எனக்கு போதிய உரித்தும் தத்துவமும் உண்டு எனவும் காளிமுத்து இராமச்சந்திரன் என்பவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


இவ்வாதனத்தை வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலக ஆதன வரிப் பதிவேடுகளில் செல்வராசா கஜீந்தன் மனைவி மேகலா என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் சட்டரீதியான உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் எழுத்து மூலம் தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்வராசா கஜீந்தன் மனைவி மேகலா எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய சட்ட ரீதியான பிசகுகள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பேற்கமாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி.பிரகாஷ்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

**27.11.2025**

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1952



மறைவு 18 . 11 . 2025

**தம்பையா இராஜன்**
**(வில்லுப்பாட்டு இராஜன்)**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திரு.தம்பையா இராஜன் அவர்கள் கடந்த 18.11.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா - மனோன்மணி தம்பதியரின் அருமை மருமகனும், யசோதாவின் அன்புக் கணவரும், மோகனதாஸ், மேகலா, தனஞ்சேயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவராசா (யாழ்ப்பாணம்), கிருஷ்ணமூர்த்தி (திருகோணமலை), லீலாவதி (பிரான்ஸ்), நவீந்திரராசா (நவம் - யாழ்ப்பாணம்), கணேசமூர்த்தி (பிரான்ஸ்), கருணாவதி (ஜேர்மனி), கருணாகரன் (பிரான்ஸ்), நந்தினி (வவுனியா) ஆகியோரின் அருமைச் சகோதரனும், கனகம்மா (சுவிஸ்), திலகா (திருகோணமலை), காலஞ்சென்ற இசக்கிமுத்து மற்றும் சிவகுணராசா (ஜேர்மனி), இந்திராணி (யாழ்ப்பாணம்), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு (ஜேர்மனி நேரம்) LINDHOOPER STREET, 27283, VERDEN (ALLER) GERMANY இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 30811) A

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் தில்லையம்பலம் நவரெத்தினம் (மெம்பர்)

**(வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர்)**



அன்பினால் அரவணைத்து
பண்புடன் எமைக் காத்து
ஆல் போல் தளைத்து நின்று
இமை போல் எமைக் காத்திருந்தீர்
கண நேரத்தில் காலனவன்
கவர்ந்து செல்வான் என யாமறியோம்
ஆற்றிட முடியாத் துயர் தோய்ந்து
பரிதவித்து நிற்கின்றோம்.

கடந்த 29.10.2025 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் தில்லையம்பலம் நவரெத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் ஆறுதல் தெரிவித்தவர் களுக்கும், எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (28.11.2025) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் உடுப்பிட்டி, போக்காலை வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும் அந்தியேஷ்டி நிகழ்விலும் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனை மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தோற்றம் 04.03.1937 | மறைவு 29.10.2025

**போக்காலை வீதி,**
**உடுப்பிட்டி.**

**குடும்பத்தினர்**
தொலைபேசி - 077 471 5767, 076 573 1203

(CR/46580) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னதம் பெறட்டும் உதயனின் பணி!



இலங்கை ஊடகத்துறை வரலாற்றில் தமிழ் நாளிதழாக 'உதயன்' என்ற திருநாமம் தாங்கி எந்தவொரு அடக்குமுறைக்கும் அடிபணியாது இன்றுடன் 40 ஆண்டுகளை இந்தப் பத்திரிகை பூர்த்தி செய்கின்றது. இது சாதாரண விடயமல்ல. இந்தப் பெரும் பயணத்தை முன்னிட்டு, அடியேன் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று பல இணைய வசதிகள் இருந்தாலும் மக்களிடையே பத்திரிகை வாசிக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அதிகாலைப் பொழுதில் உலக விடயங்களை அறிவதற்கு ஆர்வமாய் வாசிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. 'நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு' என்ற ஔவையாரின் வாக்குக்கிணங்க, பல்வேறு புதிய விடயங்களையும் வாழ்க்கை அனுபவங்களையும் அறிவதற்கு காரணியாக வாசிப்பு அமைகின்றது.

சமயம் சார்ந்த ஆன்மீகக் கருத்துகள், அரசியல் புதினங்கள், விளையாட்டுச் செய்திகள் என்ற தனித்துவமான சிறப்புகளோடு வீறுநடை போடும் உதயன் நாளிதழ் தமிழ் மக்களின் அரசியல் குரலாக ஒலித்து விரைவில் பொன் விழா, மணிவிழா, நூற்றாண்டு விழா காண பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்**
பிரதமகுரு
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
பிரதமகுருவும் ஆதீனக் கர்த்தாவும்
தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## தமிழர் மத்தியில் தமிழ்த்தேசிய உணர்வை தொடர்ந்து தக்கவைக்கும் உதயன்



ஈழத்தமிழர் இதயங்களைக் கொள்ளைகொண்ட நாளிதழ்களில் உதயனுக்கு உன்னதமான இடம் உண்;டு. கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத்தமிழரின் அபிமானத்தை வென்ற செய்திப் பத்திரிகையாக உதயன் தொடர்ந்து உலா வருகின்றான்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம் பல்வேறு பரிணாமங்களைக் கடந்து வந்தபோதிலும் எல்லாக் காலத்திலும் தமிழ் மக்களிடம் தமிழ்த் தேசிய உணர்வு கொழுந்துவிட்டு எரிவதற்கு உதயன் தன்னாலான தன்னிகரில்லாப் பங்;களிப்பை வழங்கி வந்துள்ளான். தமிழர்களின் விடுதலைப் போராட்டம் உச்சத்தில் இருந்தபோதும் சரி, விடுதலைப் புலிகளின் ஆயுதம் மௌனிக்கப்பட்டபோதும் சரி தமிழ் மக்களின் உள்ளத்தில் தமிழ்த்தேசிய உணர்வு குன்றிப்போகாமல் அதைத் தொடர்ந்து தக்கவைப்பதில் உதயனுக்கு கணிசமான, காத்திரமான பங்கு இருந்துவந்துள்ளது எனலாம்.

தமிழீழத்தில் போர் உக்கிரமடைந்த காலத்தில், அரச படைகளினினதும் ஏனைய தமிழ்க் குழுக்களினதும் கொலை அச்சுறுத்தல்கள் நிறைந்த மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் உதயன் பத்திரிகை ஆற்றிய செய்திப்பணி வார்த்தைகளில் வடிக்க முடியாதது. உதயன் பத்திரிகையில் பணியாற்றிய அனைவரும் தமது இன்னுயிரைப் பணயம் வைத்தே பணியாற்றினார்கள் என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அந்தக் கடினமாக காலங்களையெல்லாம் கடந்து இன்றுவரை இப்பத்திரிகை தன்னிகரில்லாப் பத்திரிகையாக வீறுநடை போடுகின்றது.

உதயன் பத்திரிகையின் செய்திகள் சுருக்கமாக, இறுக்கமாக அதேவேளை சுவாரசியமாக அமைந்திருக்கும். இன்றைய அவசர உலகில் ஆற அமர இருந்து மணித்தியாலக் கணக்காக பத்திரிகை வாசிக்கும் அவகாசமோ, பொறுமையோ பொதுவாக யாருக்கும் இல்லை எனலாம். இத்தகைய சூழ்நிலையில் உதயன் பத்திரிகை குறுகிய நேரத்தில் கூடுதலான செய்திகளை வாசிக்கும் அனுபவத்தை வாசகருக்குத் தருவதாக உள்ளது.

உதயனின் ஆசிரிய தலையங்கங்கள் அருமையானவை! யாதார்த்தத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுபவை. உண்மைகளை உரக்கச் சொல்பவை. ஆட்சியாளர்களுக்கு சில விடயங்களை அழுத்தமாக உரைப்பவை. மக்களின் குரலாக ஒலிப்பவை.

உதயன் பத்திரிகையில் ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் 'சஞ்சீவி', புதன் கிழமைகளில் வரும் 'புதன் பொய்கை' போன்றவற்றில் வெளியாகும் கட்டுரைகள் கனதியானவை. ஆழமானவை, அறிவூட்டுபவை. இவற்றில் வெளிவரும் பல்சுவை அம்சங்கள் சுவாரசியமானவை. மக்கள் மனங்கவர்ந்தவை.

உதயன் பத்திரிகையின் பணிகள் இன்னும் சிறக்க எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்**
குருமுதல்வர்,
மன்னார் மறை மாவட்டம்




## கருத்தாழம் மிக்க தகவல்களை காத்திரமாக முன்வைக்கின்றான்



தமிழ் நிலத்தில் வெளிவருகின்ற முதன்மையான பத்திரிகையாகத் திகழும் உதயன் தமிழர் உணர்வுகளோடு கலந்து நிறைந்து நிற்பதை காணக்கூடியதாக இருக்கிறது. தமிழ் மக்கள் கடந்த காலத்தில் பல்வேறு இன்னல்களை சந்தித்தபோதெல்லாம் இப் பத்திரிகை கருத்தாழம்மிக்க தொலைநோக்குள்ள ஆக்கபூர்வமான செயலூக்கம் மிக்க கருத்துக்களை வெளியிட்டு தமிழ் தலைவர்களையும் ஏனைய அரசியல் தலைவர்களையும் நெறிப்படுத்திவருவதை பாராட்டாமல் இருக்க முடியாது.

ஊடகங்கள் பொழுதுபோக்கும் கருத்துக்களை வெளியிட்டு மக்களை தம் வசப்படுத்துகின்ற சூழ்நிலையும் இருக்கின்றது. இதற்கு மாறாக சமூகத்தின் பழுதுபார்க்கும் சிந்தனையோடு கருத்துக்களை வெளியிடுவதில் உதயனுக்கு நிகர் உதயனே. இப்பத்திரியை வெளயிடும் ஆசிரியர் தலையங்கங்களும் எனைய தலைப்புச் செய்திகளும் குறிப்பாக பட்சி போன்ற ஆக்கங்களும் அனைவரையும் சிந்திக்க தூண்டுவதாகவே அமைந்து காணப்படுகிறது. இதன் மூலம் காட்டாட்சி நடத்த விரும்புவோரைச் சிந்திக்க வைக்கின்றது என்றால் மிகை ஆகாது

போர் மேகம் சூழ்ந்த காலத்தில் தனது கருத்துக்களை துணிவாகவும் தெளிவாகவும் வெளியிட்டு உயிர்த்தியாகங்களையும் துன்பங்களையும் சந்தித்த போதும் தொடர்ந்தும் தனித்துவமான பாணியில் உதயன் இயங்கி வருவது பாராட்டுக்குரியது. இத்தகைய அற்புதமான பத்திரிகையை வழி நடத்தும் முகாமத்துவ பணிப்பாளர் பிரதம ஆசிரியர் ஏனைய செய்தி ஆசிரியர்கள் எனைய சகல உத்தியோகத்தர்களும் அளவிடற்கரிய பாராட்டுக்குரியவர்களே.

உதயன் பத்திரிகை பேரெழிச்சியோடு தொடர்ந்து வெளிவருவதற்கு எல்லாம் வல்ல ஆடல் வல்லானின் திருவருள் அபரிமிதமாகசச் சொரிய வேண்டுமென பிராத்திக்கின்றோம்.

**ஈசான சக்திகிரீவன்**
தலைவர்
இந்து சமயப் பேரவை

## என்றும் முதல்வன்



வடக்கின் முதன்மை நாளிதழாய் தலைநிமிர்ந்து நடைபயிலும் உதயன் பத்திரிகையானது தனது 41ஆவது அகவையில் காலடி பதித்து நிற்கும் நன்நாளிலே ஆசிச் செய்தியை வளங்குவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

பத்திரிகை என்பது சமூகத்தின் உண்மைக் கருத்துகளை பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்க வேண்டும் என்பதே அதன் தர்மமாகும். 1985ஆம் ஆண்டில் உதயமான உதயன் பத்திரிகையானது காலத்தின் தேவையை உணர்ந்து தனது தகவல்களை நடுநிலமையுடன் உண்மையானவையாகவும் உன்னதமானவையாகவும் வளங்கி வந்தாலும், மக்கள் மனம் கவர்ந்த நாளிதழாக இன்று தனியிடம் பிடித்துள்ளது. அரசியல், வர்த்தகம், ஆன்மீகம், சமயம், விளையாட்டு, பாரம்பரியம், மருத்துவம் சுகநலம், தமிழ்மொழிசார் இலக்கியம் என பெறுமதியான கட்டுரைகள் துறைசார் அறிவியலாளர் தனது ஆக்கங்களாக வழங்கிவரும் உதயன் பத்திரிகையின் தரம் மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

கடந்து வந்த பாதையிலே சந்தித்த பல அழுத்தங்கள், ஆக்கிரமிப்புகள், அராயகங்கள், இழப்புகள் அனைத்தையும் தாங்கித் தகர்த்தெறிந்து வெற்றி நடைபேடும் உதயனின் பணி பல்லாண்டு தொடர வேண்டுமென இறைவனை வேண்டி அதன் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருவோரை வாழ்த்துகின்றேன்.

**முருகேசு எசக்கியேல்**
அருளுரையாளர்
மெதடிஷ்த திருச்சபை

## நம்பிக்கையின் குரலாய் நம்மோடு பயணிப்பவன்!




யாழ்ப்பாண மக்களின் நம்பிக்கையும், நட்பையும் தாங்கி 41ஆவது ஆண்டில் வெற்றிகரமாகப் பயணிக்கும் 'உதயன்' பத்திரிகையின், பிறந்ததின சிறப்பிதழ் வெளிவருவதையொட்டி எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

கடந்த பல தசாப்தங்களாக உண்மையைத் துணிவுடன் முன்வைக்கும் மக்களின் குரலாக அவர்களின் போராட்டங்களையும், வளர்ச்சியையும் பதிவு செய்துவரும் 'உதயன் பத்திரிகை' எம் தமிழ் சமூகத்துக்கு மறுக்கமுடியாத சேவையை வழங்கி வருகிறது. சமூகநீதியைக் காக்கவும், ஜனநாயக மதிப்புகளைப் பேணவும், கல்வி - கலாசார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் செய்தித்தாள் வகிக்கும் பங்கு மிகவும் அளப்பெரியதாகும். அந்தப் பொறுப்பை நேர்மையாகவும் தன்னலமற்ற உணர்வோடும் தொடரும் 'உதயன்' பத்திரிகைக்கு தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதினத்தின் பேராயராகவும், சமூகத்தின் ஓர் அங்கத்தவராகவும் இதயம் கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநீதி, சமாதானம், மனிதநேயம், மதநல்லிணக்கம் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் உயரிய பணியை மிகவும் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் உங்கள் நிர்வாகத்திற்கும் பணியாளர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி பத்மதயாளன் அடிகள்**
பேராயர்
தென்னிந்தியத் திருச்சபை யாழ்.ஆதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயனின் வீறுநடைக்கு அகவை நாற்பத்தொன்று



தமிழ்த் தேசிய இலக்கிலே களமாடும் உதயன் நாற்பத்தோராவது அகவையில் புத்தொளி பரப்புகின்றான். புதிய அகவையில் கால்தடம் பதிக்கின்ற உதயனுக்கு எனது இதயம் கனிந்த அகவைநாள் வாழ்த்துகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தனக்கே உரித்தான தனித்துவத்தோடு தமிழ்த் தேசிய மக்களின் அரசியல், கலை, கலாசாரம், வாழ்வியல் அம்சங்களைத் தன்னகத்தே சுமந்து ஒவ்வொரு நாளும் மக்களின் கரங்களில் தவழ்கின்றான் தமிழ் மக்களின் மனம் நிறைந்த நாளிதளாகவும் இடம்பிடித்துக் கொண்டுள்ளான். மிகச் சிக்கலான அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளிலும் உதயன் தனது பயணத்தினை நிறுத்திக்கொள்ளாமல் தொடர்ந்து பணியாற்றுகின்றான்.

அந்த வகையிலேயே உதயனின் ஊடகப் பயணமென்பது கனதியானது, வலிகள் மிகுந்தது, இரத்தமும் படுகொலைகளும் அச்சுறுத்தல்களும் கலந்த அவலங்கள் மிகுந்த வரலாற்றைக் கொண்டது. அவ்வப்போது உதயனின் ஜனநாயகக் குரல்வளை அதிகார வர்க்கங்களால் நசிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, கடந்த 2006ஆம் ஆண்டில் உதயன் தலைமை அலுவலகத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள், துப்பாக்கிச்சூடு மேற்கொண்டதில் இருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர். அலுவலகத்துக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது. இதைத் தவிர, 2013ஆம் ஆண்டு உதயனின் கிளிநொச்சி அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் மீதான தாக்குதல்களில் ஊடகர்கள் மற்றும் பணியாளர்கள் காயமடைந்ததுடன், கோடிக் கணக்கான சொத்திழப்புகளும் ஏற்பட்டன.

தமிழ்த் தேசியக் காலவெளியை தலைமைகளுடன் களமாடும் உதயன், வலிகள் கடந்து தனது நாற்பத்தோராவது அகவையில் கால்தடம் பதிக்கின்றான்.

அவனது பயணம் விசையோடு வீறுநடை போடுகின்றது. இதேபோல் எதிர்காலத்திலும் இருப்பில் பலமாகி உதயனின் ஊடகத்திறன் சிறக்க இன் நன்நாளில் வாழ்த்துகின்றேன்.

**துரைராசா ரவிகரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

# சிறுபான்மை மக்களை ஒன்றிணைத்தவன்



உதயன் பத்திரிகை உதயமாகி இன்று 40 வருட நிறைவைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் அதனை வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றேன்.

வடக்கு மக்களையும் குறிப்பாக சிறுபான்மை மக்களை அதிகளவில் உள்ளீர்த்து பல்வேறு சோதனைகளில் சாதனை படைத்த ஒருபத்திரிகை என்றால் அது நிச்சயமாக உதயன் பத்திரிகையாகத்தான் இருக்கமுடியும்.

ஊடகம் என்பது உண்மை நிலையைச் சீர்தூக்கிப் பார்ப்பதுடன் சமூகம் சார்ந்த அடக்குமுறைகளை துணிச்சலுடன் வெளிக்கொணர்வதும் தனது வாசகர்களுக்கு சரியான தகவல்களை உரிய நேரத்தில் வழங்குவதும் மிக முக்கிய மாகும். அந்தவகையில் உதயன் பத்திரிகையானது இவ்விடயத்தை செவ்வனே செய்து முன்னிலையிலும் உள்ளது. இவ்வாறு இப்பத்திரிகை முதன்மை பெறுவதற்கு பத்திரிகையை நடத்துகின்ற பத்திரிகை ஆசிரியர், செய்தி சேகரிப்பாளர்கள், தொகுப்பாளர்கள், பிரதேச நிருபர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவையும் செயற்பாடுகளுமே காரணமாகும்.

உதயன் பத்திரிகை இதே திறனுடன், பக்கம் சாராது பல சாதனைகளைப் படைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்

**கே.காதர் மஸ்தான்**
நாடாளுமன்ற உறுப்பினர்



சர்வதேச விருது வென்ற ஒரேயொரு தமிழ் ஊடகம்
1985 2025

# சவால்களை எதிர்கொண்டு உழைத்தவன்



உதயன் பத்திரிகையின் 41ஆவது ஆண்டு பிறந்தநாளை முன்னிட்டு, அதன் நிர்வாகத்தினருக்கும், ஆசிரியர் குழுவுக்கும், பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாற்பது ஆண்டுக்களாக வடக்கு-கிழக்கு மக்களின் குரலாக, மக்கள் பிரச்சினைகளையும், உரிமைகளையும், உண்மைகளையும் மற்றும் சமூக நலத்துக்கான கருத்துகளையும் தைரியமாக வெளிப்படுத்தி வந்த ஊடகம்தான் உதயன். ஜனநாயகத்தின் அடித்தளமான தகவல் வலையமைப்பை வலுப்படுத்தவும், சமூக நீதி மற்றும் மனிதநேயத்தை முன்னிறுத்தவும் உதயன் செய்த பங்களிப்பு சிறப்புக்குரியது.

சவால்கள் பல இருந்தபோதிலும் மெய்யுணர்வுடனும் அர்ப்பணிப்புடனும் செய்திப்பணியாற்றி வரும் உதயன் அணியினருக்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்திலும் உண்மையும் நியாயமும் நிறைந்த பத்திரிகை பணியைத் தொடர்ந்து முன்னெடுத்து, மக்களின் வலிமையான தகவல் தளமாக இருந்து வளர என் வாழ்த்துகள்.

**இஸ்மாயில் முத்து முஹம்மட்**
நாடாளுமன்ற உறுப்பினர்

# பொருளாதாரத் தடைக்குள்ளும் உதித்தவன் உதயன்!



இன்று 41ஆவது அகவைக்குள் கால்பதிக்கும் உதயன் நாளிதமுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத் தமிழர்களின் அரசியல், போராட்ட வாழ்வியலில் மக்களுடன் மக்களாக எத்தனை தடைகளையும் தாண்டி நாற்பது வருடங்கள் கடினமான பாதையில் பயணித்து 41ஆவது ஆண்டைத் தொட்டு நிற்கும் உதயன் தமிழ்த் தேசிய நாளிதழுக்கும் அதன் வெற்றிக்குப் பின்னால் அன்றும் இன்னும் என்றும் உழைத்துக் கொண்டிருக்கும் உதயன் குழுமத்தாருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கறைபடிந்த நிகழ்வுக்குப் பின்னர், தமிழ் மக்களின் போராட்டம் முனைப்புப் பெற்றிருந்த வேளையில் மக்களுக்கு உண்மையான செய்திகளை வழங்கக்கூடிய ஊடகங்கள் எம்மத்தியில் மிகச் சொற்பமாகவே இருந்தன. அதிலும் அரசின் ஊடக அடக்குமுறைக்குள் செய்திகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்து தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிறைந்த ஓர் ஊடகமாக அந்தக் காலப்பகுதியில் உதயன் விளங்கியதை மறுக்க முடியாது. வடக்கின் மீதான அரசாங்கத்தின் பொருளாதார தடைகளுக்கு மத்தியில் பத்திரிகை தயாரிப்பதற்கான காகிதாகிகள் இல்லாதபோதிலும் 'புல்ஸ்காப்' கடதாசிகளில் செய்திகள் வெளியிட்டமையை மறக்க முடியாது.

உண்மையான செய்திகளை துணிச்சலுடன் வெளியிட்டமையால் பத்திரிகை அலுவலகம் அரச ஆதரவு காடையாளர்களால் பல தடவைகள் தாக்கப்பட்டதுடன், அங்கு பணியாற்றிய பணியாளர்கள் சிலரும் கொல்லப்பட்டனர். நடுநிலையான உன்பணி தொடர வாழ்த்துக்கள்.

**ப.சத்தியலிங்கம்**
நாடாளுமன்ற உறுப்பினர்

# தாயக தேசத்தில் தனித்துவமானவன்



41ஆவது அகவையில் தடம்பதிக்கும் உதயனுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில், மக்கள் பிரதிநிதி என்பதற்கப்பால் உதயனின் நிரந்தர வாசகனாக மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஆத்ம திருப்தியும் அடைகின்றேன்.

எண்திசை செய்திகளையும் புரட்டிப்படித்திட இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்புகளையும் விஞ்சி நின்று தனக்கென தாயக தேசத்தில் இடம் பிடித்திருக்கின்றான் உதயன். உதயனை அழித்திட, நிறுத்திட, குரலை நசிக்கிட, கயவர்கள் பலர் முயன்றிட்ட போதேல்லாம் நெஞ்சை நிமிர்த்தி நிலை தடுமாறாமல் தடம் மாறா இலக்கில் நிமிர்ந்து நின்றவன் உதயன்.

இனியும் வீழ்த முடியாது என்ற தன்நம்பிக்கையோடு தேசமெங்கும் செய்திகளை காவிச்செல்கின்றான். அச்சம் தவிர்த்து ஊடகதர்மம் பேணி நடுநிலை தவறாது பல்துறைசெய்திகளையும் தொடர்ந்தே வழங்கிட உதயன் துணிவுடன் வலம்வர உழைத்துக்கொண்டிருக்கும் உதயன் குழுமத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

**அ.அடைக்கலநாதன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

# வரலாற்றில் நிலைப்பவன்



பத்திரிகை அவசியத்தை உணர்ந்து பாமர மக்களும் படித்தறிந்து கொள்ளக்கூடிய வகையில் உதயன் பத்திரிகை தொடர்ந்து தன் சேவைகளைச் செய்து வருகின்றமை மனம் திறந்து பாராட்டப்படக் கூடியது.

அச்சியந்திரத்தின் அறுவடைகளில் ஒன்றாய் பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். பொதுமக்கள் தொடர்பு ஊடகமாய் பயன்பட்ட மிகச்சிறந்த சாதனம் பத்திரிகை. அந்தவகையில் தமிழ்ப்பத்திரிகை வரலாற்றில் உதயன் பத்திரிகைக்கும் சிறப்பானதோர் இடம் உண்டு எனத் துணிந்து கூறலாம். அத்தகைய பத்திரிகை இன்று 41ஆவது ஆண்டில் காலடி வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதேபோல தொடர்ந்தும் நடுவுநிலமை தவறாது நல்லவற்றை வழங்கி தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்று வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

**செல்வத்தம்பி திலகநாதன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கைப் பயணம் உறுதியுடன் தொடரும்



உதயன் இன்று 41ஆவது ஆண்டுக்குள் நுழைகின் றான். உதயன் என்ற பெருவிருட்சம் இதுவரை கடந்து வந்த 40 வருடங்களில் எதிர் கொண்ட சோதனைகளும், அவற்றைத் தகர்த்து நிகழ்த்திக்காட்டிய சாதனைகளும் தமிழ் ஊடகப் பரப்பில் தனியொரு வரலாறாக நிலைத்து நிற்கும்.

உதயனை ஆரம்பித்த தருணத்தில் இந்தளவுதூரம் ஓர் இனத்தின் குரலாகக் கொண்டாடப்படும் ஊடகமாக அடையாளப்படுத்தப்படும் என்ற எண்ணம் இருந்ததில்லை. ஆனால், கொண்ட கொள்கையில் குன்றிடாத வேகமும், இலட்சியத்தில் இருந்து தடம்மாறாத பயணமும் ஊடக நேர்மையும் மக்கள் நலனும் கொண்டு உதயன் தொடர்ச்சியாக வெளிவந்தமையும் அதற்கு மக்கள் காட்டிய ஆதரவுமே இந்த உன்னத நிலையை நாம் அடைவதற்குக் காரணிகளாகின.

உதயனின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் ஸ்தாபக ஆசிரியரும் வாழ்நாள் பிரதம ஆசிரியருமான ம.வ.கானமயில்நாதன் உள்ளிட்ட ஆரம்பகாலப் பணியாளர்களை இந்நாளில் நான் நன்றியுடனும், பெருமையுடனும் எண்ணிப் பார்க்கின்றேன். அவர்களைத் தொடர்ந்து, உதயனின் விழுதுகளாக வளர்க்கப்பட்ட ஏனைய பணியாளர்களை எண்ணியும் பெருமிதப்படுகின்றேன். உதயனின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், வாசகர்கள், படைப்பாளர்கள், ஏனைய ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும். கொண்ட கொள்கைக்காக உதயன் கொடுத்தவிலை ஏராளம். எனினும், அந்த உயரிய நோக்கில் இருந்து நாம் இம்மியும் தாளவில்லை. அதே உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் பிரதம ஆசிரியர் அமைத்த பாதைவழியே தொடர்ந்தும் உதயன் பயணிப்பான் என்பதை உறுதி செய்கின்றேன்.

**ஈ.சரவணபவன்**
உதயன் குழுமத் தலைவர்,
நாடாளுமன்ற முன்னாள்
உறுப்பினர்




# இழப்புகளைக் கண்டு துவளாதவன் உதயன்



கடந்த 40 ஆண்டுகளாக யாழ்ப்பாண மண்ணில் இருந்து தமிழ் பேசும் மக்களது உணர்வுகளையும் அரசியல் அபிலாசைகளையும் கலாசாரப் பேண லையும் தமிழ்மொழி மேம்பாட்டையும் பொருளாதார வாழ்வாதார மேம்பாட்டையும் பாரம்பரிய இலக்கிய மற்றும் கலைகளின் வளர்ச்சிக்காகவும் கரம் கொடுத்து வந்துள்ள "உதயன்" நாளிதழ் அதனது 41 ஆவது அகைவையில் கால் எடுத்து வைப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். அத்தனை பணிகளிலும் உதயன் சந்தித்த எதிர்ப்புகள், ஏளனங்கள், இழப்புகள் என்பன ஏராளம்.

எதிர்ப்புகளையும் இழப்புகளையும் கண்டு சோர்ந்து, துவண்டுவிடாமலும் அதிகளவு கர்வம் கொள்ளாமலும் இருக்கவேண்டிய பண்புகள் கூடுமான வரை உதயன் பேணி வருவது மிகவும் சிறப்பானதாகும். இன்றைய நாடளாவிய பொருளாதார இக்கட்டுக் களுக்குள்ளும், அச்சுப் பத்திரப் பற்றாக்குறை மற்றும் விலையேற்றதுக்கு மத்தியிலும் அச்சு ஊடகமான 'உதயன்' நாளிதழ் வெளிவருகின்றமை பாராட்டுக்குரியது. யாழ்ப்பாணப் பெருநிலத்திலிருந்து தொடர்ந்தும் சிறந்த ஊடகமாக திகழ்வதற்கு உதயனுக்கு எமது வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும் உரித்தாகுக.

**சீ.வீ.கே.சிவஞானம்**
அவைத் தலைவர்
வடக்கு மாகாண சபை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் காவலனாய்

உள்ளதை உள்ளபடி
உரத்துச் சொல்பவன்
உயரவே பறக்கும்
கருடனாய் அறிபவன்

அள்ள அதைச் சுவையோடு
ஆக்கித் தருபவன்
அத்தனைக்கும் சாட்சியோடு
ஆதாரம் வைத்திருப்பவன்

மெல்லவரும் சிக்கல்கண்டு
பயந்தோடமாட்டான்
மின்னல் இடிகண்டு
ஓடி உறங்கிவிடமாட்டான்

குள்ளநரிகள் குழிபறிக்கப்
பலியாகமாட்டான்
கோவிலாக உதயனை
கொடியேற்றி வைப்பான்

- கே.எஸ்.சிவஞானராஜா

## ஊடக தர்மத்தால் உயர்வு கொண்டவன்

தன்னிகரில்லாத் தானைத் தலைவன்
தமிழின் பெருமை செப்பும் வள்ளல்
ஊடக தர்மத்தைக் கைகளில் ஏந்தி
உயர்வு கொண்ட உத்தம புத்திரன்

தீயின் சுவாசம்அறிந்த போதும்
தீயவர் முன்னே தீந்தமிழ் ஆனவன்
அரங்கம் தந்த அழகுடை வேந்தன்
பரந்த பார்வை பண்பில் ஓங்கும்

நீதியின் குரலாய் நெடிய மூச்சு
நிரந்தப் பணியில் நிறைந்த செய்திகள்
காற்றும் கனலும் கண்மூடி வரினும்
கனிந்த சேவையில் கரிசனை மிகவே

புதன் பொய்கையில்
புன்னகைக்கும் படைப்புகள்
இதமாகும் எங்களின் இதயப் பக்கங்களில்

கலைஞரை உருவாக்கிய
கருவறை நீயே
அலையென வாசகர்
அன்புடன் உன்னில்
அகவை புதிதில் அகமும் நிறைய
அன்புடன் உன்னை
வாழ்த்தி மகிழ்கிறேன்
வையம் உள்ளவரை



உடுவிலூர்க்கலா

# தமிழ்பேசும் மக்களுக்கு தனித்துவமான ஊடகப்பணி



தமிழ் பேசும் சமூகங்களுக்கு 41 ஆண்டுகால சிறப்புமிக்க சேவையை நிறைவுசெய்யும் இந்த முக்கியமான தருணத்தில், உதயன் பத்திரிகைக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த பெருமையடைகின்றேன்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக உதயன் பத்திரிகை பொதுமக்களுக்குத் தகவல் அளித்தது மட்டுமல்லாமல், மீள்தன்மை, தைரியம் மற்றும் பத்திரிகை ஒருமைப்பாட்டுக்கான அசைக்கமுடியாத அர்ப்பணிப்பின் அடையாளமாகவும் இருந்து வருகிறது. அமைதிக் காலங்களிலும், கடினமான காலங்களிலும் செய்தித்தாள் அதன் பணியில் உறுதியாக இருந்து வருகிறது. சமூகத்தின் யதார்த்தங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருதல், குரலற்றவர்களுக்கு குரல் கொடுப்பது மற்றும் செய்தி, பகுப்பாய்வு மற்றும் சமூக நுண்ணறிவின் நம்பகமான ஆதாரமாக சேவை செய்தல், சமநிலையான அறிக்கையிடல் மற்றும் உண்மைக்கான அர்ப்பணிப்பு மூலம், உதயன் பத்திரிகை ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்துவதிலும், சமூக நீதியை ஊக்குவிப்பதிலும், தகவலறிந்த குடியுரிமையை வளர்ப்பதிலும் முக்கியமான பங்கு வகித்துள்ளது. உள்ளூர் தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்த அதன் செய்தி தமிழ் பேசும் சமூகத்தின் கலாசார அடையாளம் மற்றும் அபிலாஷைகளைப் பாதுகாப்பதிலும் வாசகர்கள் உலகத்துடன் இணைந்திருக்க உதவியுள்ளது.

தினசரி செய்திகளை வெளியிடுவதைத் தாண்டி, இந்தப் பத்திரிகையின் பங்களிப்பு நீண்டுள்ளது. அறிவுசார் உரையாடலை வளர்த்துள்ளது, கலை மற்றும் இலக்கியத்தை மேம்படுத்தியுள்ளது, இளைஞர்களின் ஈடுபாட்டை ஊக்குவித்துள்ளது, மேலும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்குக் கவனம் செலுத்தியுள்ளது. மனித உரிமைகள், நல்லாட்சி மற்றும் சமூக மேம்பாட்டிற்கான அதன் தொடர்ச்சியான வாதங்கள், இலங்கையில் ஊடகப் பொறுப்பின் ஒரு அடையாளமாக இதை மாற்றியுள்ளது. உதயன் இந்த குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் கொண்டாடும் வேளையில் அதன் ஆசிரியர் குழு, பத்திரிகையாளர்கள், நிருபர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் ஆதரவு ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்தை நான் பாராட்டுகிறேன். சவாலான சூழ்நிலைகளில் பெரும்பாலும் வெளிப்படுத்தப்படும் அவர்களின் தொழில்முறை மற்றும் தைரியம் வாசகர்களிடமிருந்தும் பரந்த சமூகத்திலிருந்தும் ஆழ்ந்த மரியாதையைப் பெற்றுள்ளது.

எதிர்காலத்தில் உதயன் தொடர்ந்து புதுமைகளை உருவாக்கும் அதன் வரம்பை விரிவுபடுத்தும் மற்றும் நெறிமுறை பத்திரிகையின் மிக உயர்ந்த தரங்களை நிலைநிறுத்தும் என்று நான் நம்புகிறேன். செய்தித்தாள் நேர்மறையான மாற்றத்தைத் தொடர்ந்து ஊக்குவிக்கும், சமூக நல்லிணக்கத்திற்கு பங்களிக்கும், மேலும் வரும் தலைமுறைகளுக்கு நம்பகமான தகவல் களங்கரை விளக்கமாக இருக்கும் இந்தச் சிறப்புச் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியான வெற்றி, வளர்ச்சி மற்றும் சிறப்பிற்காக எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நா.கமலதாசன்
மேலதிக மாவட்டச் செயலர்
வவுனியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் உரிமைக்காக ஆற்றிய சேவை போற்றத்தக்கது



யாழ்.குடாநாட்டிலிருந்து கடந்த 40 தசாப்தகாலமாக வெளிவரும் உதயன் பத்திரிகை இன்று தனது 41 ஆவது வருடத்தில் காலடி வைக்கின்றது. கடந்த 40 ஆண்டுகளாக மக்களின் தகவல் அறியும் உரிமைக்காக உதயன் ஆற்றிய சேவை போற்றத்தக்கது.

அநீதிக்கு எதிராகவும், நீதிக்காகவும், குரல்லற்றவர்களின் குரலாகவும் பயணித்துக்கொண்டிருக்கும் உதயன், எப்போதும் தன்னை புதுப்பித்துக்கொள்ளும் தன்மைகொண்டது. நமது பண்பாட்டு விழுமியங்கள் அழியாது, புதுமைகளுக்கும் இடமளித்து ஊடகப்பணியைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், நீடித்த சமாதானத்துக்காகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு உதயன் உறுதியான பங்களிப்பை வழங்குமென நம்புகின்றேன். இதுதொடர்பில் வாசகர்கள் மத்தியில் தகவல்களை சுமந்து செல்லும் பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்பட்டுவருகின்றது என கருதுகின்றேன்.

உதயனின் பிரதம ஆசிரியர், செய்தி ஆசிரியர், ஆசிரியர்பீட உறுப்பினர்கள், கணினிப் பிரிவு ஊழியர்கள், அச்சு பிரிவு ஊழியர்கள், விநியோக பிரிவினர் என அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகள். அதேபோல உதயனில் உயிர்நீத்த ஊடகப் போராளிகளையும் இந்நேரத்தில் நினைவு கூருகின்றேன். பொறுப்புடனும், பொதுநலன் கருதியும் உதயனின் பணி தொடரட்டும்.

**இராமலிங்கம் சந்திரசேகர்,**
அமைச்சர்
கடற்றொழில், நீரியல் அமைச்சு



சர்வதேச விருது வென்ற
ஒரேயொரு தமிழ் ஊடகம்
1985
2025

## கடினமான சவால்களை தைரியத்துடன் எதிர்கொண்டவன்



போர் மற்றும் அமைதிக்காலத்தின் கடின சவால்களைத் தைரியத்துடன் எதிர்கொண்டு உண்மையின் வழியில் 40ஆண்டுகள் நிலைத்து நின்ற உதயன் நாளிதழ் இன்று தனது 41ஆம் ஆண்டில் சிறப்புடன் அடியெடுத்து வைக்கிறது.

சுதந்திர பத்திரிகைத்துறையின் உண்மையான அடையாளமாக, தமிழ்ச் சமூகத்தின் குரலாக, உதயன் பல தடைகளைத் தாண்டி, நம்பிக்கையும் நேர்மையும் கொண்ட செய்திகளை வழங்கி வந்துள்ளது என்பது பெருமைக்குரியது.

உண்மை, தைரியம், பொறுப்பு ஆகியவற்றை வழிகாட்டுதலாகக் கொண்டு தொடர்ந்து வளர்ந்து எதிர்கால தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும் ஒளிக்கதிராக உதயன் நாளிதழ் நீடிக்கட்டும். வெற்றியும் வளர்ச்சியும் நிரம்பிய 41ஆம் ஆண்டு பயணத்துக்கு மனமார்ந்த நல்வாழ்த்துகள்.

**ஸ்ரீ பவானந்தராஜா**
நாடாளுமன்ற உறுப்பினர்

## பத்திரிகை உலகில் மறக்க முடியாதவன்



வடக்கு மாகாணத்தின் இதயமான யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை, இன்று தனது 41ஆவது ஆண்டில் பெருமையுடன் காலடி எடுத்து வைக்கிறது. நவீன தொழில்நுட்பத்துடன் செய்தி உலகம் வேகமாக மாறிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்திலும், உண்மை, தைரியம், நேர்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தனது பணியை தொடர்ந்து முன்னெடுத்துவரும் உதயன் பத்திரிகைக்கு இதயம் கனிந்த வாழ்த்துகள்.

இவ்வளவு நீண்ட பயணத்தில், குறிப்பாக போர்ச் சூழ்நிலையின் மிகவும் கடினமான காலங்களிலும், வாசகர்களுக்காக உண்மையை வெளிக்கொணர துணிந்தது உதயன். அச்சமின்றி செய்திகளை வெளிப்படுத்தி மக்கள் உரிமையை காக்க முயன்றது, பத்திரிகை உலகில் ஒரு மறக்க முடியாத பதிவாகும்.

தமிழர் சமூகத்தின் குரலாக, அவர்களின் நம்பிக்கையை வென்று, தினமும் ஆயிரக்கணக்கான வீடுகளின் காலை நேரத்துடன் இணைந்திருக்கும் பத்திரிகை என்பதில் பெருமை கொள்ளத்தக்கது. தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கைக்கு உரிய பத்திரிகையாக உதயன் தொடர்ந்து திகழ்ந்துவருகிறது.

உண்மை மற்றும் பொறுப்புமிக்க செய்தியாற்றலை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்த இந்தப் பயணம், இன்னும் பல தலைமுறைகளைச் சென்றடைய வேண்டும் என்பதே எங்கள் மனமார்ந்த விருப்பம்.

**க.இளங்குமரன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

## தமிழ் மக்களின் மனங்களில் வேரூன்றியுள்ளான் உதயன்!



ஊடகத்துறையில் 41ஆவது வருடத்தில் தடம் பதிக்கும் உதயன் பத்திரிகையை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்பேசும் மக்களின் குரலாக அடையாளப்படுத்தப்பட்டு களமிறங்கிய இந்தப் பத்திரிகை, காலப்போக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக் கவசமாக மாற்றம் பெற்றது. குறிப்பாக வடக்கு வாழ் மக்களின் அன்றாட நகர்வுகள் மட்டுமல்லாமல், அம்மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் அடையாளத்தை உதயன் வரலாறு தோறும் நிலைநிறுத்தியே வந்துள்ளது.

மக்கள் சார் கருத்துக்கள், உறுதியான செய்திகள் என்பவற்றுக்கு அப்பால் ஊடக தர்மத்தில் இருந்து உதயன் விலகியதாக இல்லை. இன்றைய ஊடக பரப்பில் உதயன் பத்திரிகையின் இருப்பானது காலத்தின் முக்கிய தேவை என்பதை சுட்டிக்காட்டுவதுடன் தொடர்ந்தும் வாசகர்கள் மனதில் உதயன் பயணிக்க வேண்டும் என விரும்புகின்றேன். உதயனின் ஆசிரிய பீடத்தினருக்கும், அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**ரிஷாட் பதியுதீன்**
நாடாளுமன்ற உறுப்பினர்

## தமிழ் மக்களின் போராட்டக் குரல்



தமிழ் ஊடக வரலாற்றில் நாற்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக உண்மைக்கும் நீதிக்கும் உழைத்துவரும் உதயன் நாளிதழ் இன்று தனது 41 ஆவது பிறந்தநாளை எட்டியுள்ளது என்பது சமூகத்தின் முழுமைக்கும் பெருமைக்குரிய நிகழ்வாகும்.

உண்மையைப் பேசும் ஊடகமாகவும், உரிமை மீறல்களுக்கு எதிராக மக்கள் சார்பாக குரல் கொடுத்த போராட்டக் குரலாகவும் உதயன் தொடர்ந்து செயற்பட்டு வருவது பாராட்டத்தக்க ஒன்று. செய்திகள், சமூக அவலங்கள், மனித உரிமைகள், அரசியல், கலாசாரம் உள்ளிட்ட துறைகளில் உதயன் ஆற்றிய பங்களிப்பு தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிப் பயணத்தில் மறக்க முடியாத மைல்கல்லாகும். உதயனின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் ஆசிரியர்கள், செய்தியாளர்கள், தொழில்நுட்ப குழு என அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியும் வாழ்த்துகளும் உரித்தாகின்றன. இந்த வளர்ச்சியின் முதன்மை சக்தியாகத் திகழும் வாசகர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றி.

**றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி**
நாடாளுமன்ற உறுப்பினர்

## பிறந்த நாள் சிறக்க...

**சு. மாதுளன்**
தரம் 4 மாணவன்
யாழ். கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்

ஞாயிறு காலை வரும்
என் அறிவு நண்பனுக்காய்
காத்திருப்பேன்
சிறுவர் கை வண்ணம்
சிறப்பாக அமைத்து
அறிவு சார் கதையை
அன்புடன் ஊட்டும்
என் நண்பன் உதயனுக்கு
41ஆவது பிறந்த நாள் வாழ்த்துகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம்மாறாப் பயணம் தொடரட்டும்!



நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் உரிமைகளையும், உணர்வுகளையும் துணிச்சலாக எடுத்துரைத்து, உண்மையை உலகறியச் செய்வதில் உறுதியோடு செயற்பட்ட 'உதயன்' இன்று - நவம்பர் 27ஆம் திகதி தனது 41ஆவது ஆண்டில் தடம்பதிக்கிறது. இந்தத் தருணத்தில், அதன் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இற்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய தன் பயணத்தின் முதல் நாளிலிருந்து இன்று வரை, எண்ணற்ற அச்சுறுத்தல்கள், ஆபத்துகள், அழுத்தங்கள், தாக்குதல்கள், உயிர் - உடைமை இழப்புகளைச் சந்தித்தபோதிலும், தன் பயணத்தில் சற்றும் தளராமல் ஈழத் தமிழர் வரலாற்றில் 'உதயன்' ஒரு அங்கமாகப் பதிவாகி நிற்கிறான்.

மாறிவரும் நவீன உலக ஒழுங்கில் வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகி வருகின்ற போதிலும், தனது தனித்துவமான ஆசிரியர் தலையங்கங்கள், 'பட்சி' முதலான பத்தி எழுத்துக்கள், 'முச்சந்தி முரளி' போன்ற ஜனரஞ்சகமான விடயங்கள் மற்றும் 'சஞ்சீவி' போன்ற பல்சுவை வார வெளியீடு என்பவற்றினூடாக 'உதயன்' மக்கள் மனங்களில் நிறைந்து நிற்கிறான்.

ஆனாலும், தொழிநுட்ப விருத்தியின் காரணமாக மேம்பட்டுநிற்கும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் அபரிமிதமான வளர்ச்சி என்பன அச்சு ஊடகங்களின் முன்னால் எழுந்துள்ள பாரிய சவால்களாகும். கடந்து வந்த பாதையில் பல சவால்களை எதிர்கொண்டு முன்நோக்கி நகர்ந்த : நகர்ந்து கொண்டிருக்கும் 'உதயன்', நவீன தொழிநுட்பப் புரட்சிக்கேற்றவாறும் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். உதயனின் வளர்ச்சிக்கு என்றும் துணையாக நிற்கும் அதன் அத்தனை பணியாளர்களையும், பங்குதாரர்களையும் இந்நேரத்தில் மனதார வாழ்த்துகிறேன். தனது 41ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் 'உதயன்' நிறுவனத்தின் எதிர்காலம் வெற்றி நிறைந்ததாக அமைய எல்லாம் வல்ல ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிகிறேன்.

**பேராசிரியர் சிறிசற்குணராஜா**
கணிதவியல் பேராசிரியர் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மண்ணின் செல்நெறியை தீர்மானித்தவன் உதயன்



கடந்த 40 வருடங்களாக உதயன் பத்திரிகையை நாள் தப்பாமல் வாசித்து வருகிறேன். இளைய தலைமுறையினரின் இதயம் கவர்ந்த நாளிதழ் என்ற முதன்மை வாக்கைக் கொண்டு வெளிவரத் தொடங்கிய உதயன் இன்று மக்கள் மனம் நிறைந்த நாளிதழ் என்ற வாசகத்தை தனதாக்கி வெளிவருகிறது.

எங்கள் மண்ணில் மக்கள் கண்ட இன்பங்களையும், துன்பங்களையும், உயர்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் உதயனும் சேர்ந்தே அனுபவித்தான். எங்கள் மண்ணின் செல்நெறி எவ்வாறு அமைய வேண்டுமென முக்கியமான சந்தர்ப்பங்களில் ஊடாகக் குரலாக உயர்ந்து நின்றான்.

எங்கள் மண்ணில் இருந்து இன்று பல அச்சு ஊடகங்களும், இணைய ஊடகங்களும் வெளிவருகின்றன. இருப்பினும் உதயனுக்கு ஒரு காலப்பெறுமதி உள்ளது. அந்தக் கனதியை உதயனின் தற்போதைய நிர்வாகத்தினரும், ஆசிரியரும் உணர்ந்து செயற்படுவர் என்ற எதிர்பார்ப்பு என்னிடத்தில் எப்போதும் உண்டு. கடந்த நாற்பது வருடங்களில் உதயன் மாத்திரம் வளரவில்லை தன்னுடன் சேர்ந்து எம்மையும் வளர்த்தான். அந்நன்றி எனக்கு என்றும் உண்டு. 41ஆவது அகவையில் கால் பதிக்கும் உதயன் சூரிய சந்திரன் உள்ளவரை தொடர்ந்து பிரகாசித்து வளர எனது நல்வாழ்த்துகள்.

**செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன்,**
முதல்வர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
பொதுச்செயலாளர் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்



சர்வதேச விருது வென்ற ஒரேயொரு தமிழ் ஊடகம்
1985 2025



## தமிழர் எழுச்சியின் அடையாளமாக நிலைத்து நிற்கின்றான் உதயன்!

உதயன் இதழ் இன்;று தனது 41வது ஆண்டின் பிரம்மாண்ட பயணத்தை ஆரம்பிக்கின்றது. கடந்த நாற்பது ஆண்டுகளாக உதயன் தமிழர் இதயங்களில் பரந்த உழைப்பு, உண்மை மற்றும் நம்பிக்கையின் ஒளிபுகுத்தல், சமூக சேவை மற்றும் நாட்டுப்பணிக்கு அர்ப்பணிப்பாக செயற்பட்டுள்ளது.

உதயன் தமிழர் எழுச்சிக்கு ஒரு அடையாளமாக திகழ்கின்றது. ஆயிரக்கணக்கான உயிர்கள், சொத்துகள் மற்றும் பல தியாகங்களின் பின்னணியிலும், உங்கள் உறுதி, துணிச்சல் மற்றும் நேர்மை ஒளி விளக்காக திகழ்ந்து வருகின்றது. நம்பிக்கை, நெறி, நிதானம் ஆகியவற்றை தழுவி உண்மையின் குரலாக ஒலிக்கும்; இந்த ஊடகம் உண்மைச் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் எப்போதும் தளர்வின்றி செயற்பட்டு வருகிறது.

இந்த முக்கியமான தருணத்தில், உங்கள் அர்ப்பணிப்புக்கும், உழைப்புக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள். வருங்காலத்தில் உதயன் மேலும் பல வெற்றிகள் பெற்று சமூகத்தில் ஆழமான தடம்பதித்து முன்னேற வாழ்த்துகிறேன். உங்கள் பணி மற்றும் சாதனைகள் தமிழர் சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக, மற்ற ஊடகங்களுக்கும் ஒரு முன்னோடியாக இருந்து வருகின்றது. இதேபோல் என்றும் உங்கள் பணி தொடர மனமார்ந்த வாழ்த்துகள்.

**ஸ்ரீ சாய்முரளி**
இந்திய துணைத்தூதுவர்

## ஊடக பாரம்பரியத்தை பேணிக் காப்பவன்



ஊடகப் பாரம்பரியத்தின் பலமான நிலைக்களன்!

வெகுசன ஊடகவெளியில் மக்களின் மனதைக் கவர்வதும், அந்த உள்ளார்ந்த இணைப்பைத் தக்கவைப்பதும் இலகுவானவையல்ல. அதிலும், நாளாந்தம் புதியன வற்றை, புத்தாக்கங்களை எதிர்பார்த்து நிற்கும் மக்களின் நம்பிக்கையை இத்தனை காலம் பேணிவைத்திருப்பது என்பது ஒரு செய்திப் பத்திரிகைக்கு மிகச் சவாலானதே.

இந்தச் சவாலை மிக வெற்றிகரமாக மற்றுமொரு ஆண்டின்வழி கடந்துவருகின்றான் 'உதயன்'. இலத்திரனியல் ஊடகங்களின் பெருக்கமும். இணையவழிப் புதிய ஊடகங்களின் ஆக்கிரமிப்பும் பெருகி நிற்கும் இன்றைய காலத்தில் வடபுல மக்கள் தமது உலகத்தை அறிவதற்குக் காலைத்தரிசனமாக உதயனை நாடி நிற்பதை ஒவ்வொரு கிராமங்களினதும் நகரங்களினதும் பத்திரிகை விற்பனை மையங்களில் காணக்கிடைப்பது ஊடகமொன்றுடன் மக்கள் கொண்டிருக்கும் தகவல் ஊடாட்ட நெருக்கத்தை எடுத்துச்சொல்கிறது.

இந்தப் பிணைப்பு, ஒருவகையில் யாழ்ப்பாணத்தின் நாடித்துடிப்பாகவும் உதயனை அணுகுவதற்கு வாய்ப்பைத் தந்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தின் ஊடகப் பாரம்பரியத்தைக் குறிப்பாக அதன் செய்திப்பத்திரிகைப் பண்பாட்டை மிக நீண்ட காலத்திற்குத் தன்வசம் தக்கவைத்திருக்கும் "உதயன்", இன்னும் பல ஆண்டுகள் அந்தப் பெருமையைத் தொடர வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**பேராசிரியர் சி. ரகுராம்**
பீடாதிபதி, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## உதயனின் உண்மைத்தன்மை என்றும் பாராட்டத்தக்கது!



வடபகுதி மக்களின் மனதில் தனக்கென்று தனித்துவமான ஓர் இடம் பிடித்துள்ள உதயன் பத்திரிகையானது இன்று தனது 41வது வயதில் கால் பதிப்பது பெரும் சாதனையாகும்.

உதயன் கடந்த 40 வருடங்களாகப் பல்வேறு சவால்களைச் சந்தித்துள்ளபோதிலும் தொடர்ச்சியாகத் தனது நாளிதழைப் பிரசுரிப்பது பாராட்டத்தக்கது.

இன்று ஊடகங்கள், குறிப்பாகச் சமூக ஊடகங்கள் சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் பொறுப்பு வாய்ந்த அச்சு ஊடகம் என்ற வகையில் உதயன் பத்திரிகையானது உண்மைத் தன்மையுடனும் தகுந்த ஆதாரங்களோடும் செய்திகளை வெளியிடுவது பாராட்டுக்குரியது.

பத்திரிகை வாசிப்பவர்களும், வாசிப்பில் ஆர்வம்மிக்கோரும் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் மிகவும் அரிதானதும், பயனுள்ளதுமான தகவல்கள், செய்திகளை உதயன் பிரசுரிப்பதும் வரவேற்கத்தக்கதே. மேலும் உதயன் பத்திரிகை உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளுடனும் சமூக, கலாசார மாற்றங்களுடனும் புதிய தகவல்களைத் துல்லியமாகத் தருவதும் சிறப்பானது.

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டும்வகையில் சுவாரஸ்யமான கட்டுரைகளையும் தகவல்களையும் வழங்கி வருகின்றமை மிகப்பெறுமதி வாய்ந்ததாகும். உதயன் தனது ஊடகப்பணியில் மேன்மேலும் சிறப்படைய இறைவனை வேண்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி**
பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களின் அடையாளமானவன்



வடக்கு மக்களின் வாழ்வில்; ஊடகம் வெறும் தகவல் பரிமாற்றத்தின் கருவி மட்டுமல்ல. அது அடையாளம், உரிமை ஆகியனவற்றின் பாதுகாப்பான தளமாகத் திகழ்ந்துள்ளது. இந்தப் பின்னணியில், 'உதயன்'; பத்திரிகை கடந்த 40 ஆண்டுகளாக மேற்கொண்ட பயணம், மிகுந்த அர்த்தம் வாய்ந்ததும், வரலாற்றுப் பெருமை கொண்டதுமாகும். இந்தப் பத்திரிகை வார்த்தைகளால் மட்டும் போராடவில்லை. உண்மையை நிலை நிறுத்தும் பாதையில் அது பல துன்பங்களையும் தாக்குதல்களையும் எதிர்கொண்டது. பத்திரிகை அலுவலகத்துக்குள்ளேயே ஆயுதம் ஏந்தியவர்கள் புகுந்து சுட்டுத்தள்ளியதில் இரு பணியாளர்கள் சாவைத்தழுவிய அந்த இரத்தத்தால் எழுதப்பட்ட அத்தியாயம் வடக்கு ஊடக வரலாற்றில் அழியாத நினைவாக நிற்கிறது. அது அவர்களின் தொழில் ஒரு வேலை மட்டுமல்ல, அது ஒரு தியாகம். உண்மைக்காக உயிரையே பணயம் வைக்கும் உறுதி என்பதையும் உலகுக்கு உணர்த்தியது.

இன்று ஊடக உலகம் ஒரு புதிய பரிமாணத்தில் செயற்படுகிறது. சமூக ஊடகங்களின் அதிவேகப் பரவல், தகவலை மனிதனின் கைகளுக்குள் கொண்டு வந்துள்ளது. ஆனால் அதே நேரத்தில், உண்மை மற்றும் பொய்யை வேறுபடுத்த முடியாத குழப்ப நிலையும் உருவாகியுள்ளது. உண்மைக்குப் புறம்பான செய்திகள் மிக வேகமாகப் பரவி சமூகக் குழப்பம், பிரிவினை உணர்வு மற்றும் தவறான கருத்துப் படிமங்களை உருவாக்கும் சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில், பாரம்பரிய ஊடகங்களான பத்திரிகைகள் கொள்ள வேண்டிய பங்கு மிக உயர்ந்ததும் அவசியமானதும் ஆகிறது.

உண்மையைத் தரம் குறையாமல் தெரிவிக்கும் பத்திரிகை ஒழுக்கம், சரிபார்ப்புச் செயல் முறைகளின் நம்பகத்தன்மை, சமூக நல்லிணக்கம் மற்றும் பொறுப்புணர்வை முன்னிறுத்தும் செய்தி ஆளுமை, காலத்துக்குத் தகுந்த வகையில் டிஜிற்றல் மாற்றங்களை உள்வாங்கி முன்னேறும் திறன் இவை அனைத்தும் இன்றைய உலகில் பத்திரிகையின் நிலைப்பாட்டை வலுப்படுத்தும் முக்கியமான கணங்களாகும்.

உதயன் பத்திரிகை இந்த மாற்றத்தை உணர்ந்து, தொழில்நுட்பத்துடன் இசைந்தபடியும், அதே நேரத்தில் தனது அடிப்படைகளைப் பாதுகாத்த படியும் தொடர்ந்து பயணிக்க வேண்டும். வடக்கு மக்களின் குரலை உலகுக்குக் கொண்டு செல்லும் இந்தப் புத்துணர்வான ஊடகப்பயணம், பல தலைமுறைகள் தாண்டித் தொடரட்டும். 'உதயன்' பத்திரிகை 41ஆவது ஆண்டுக்குள் காலடி வைக்கும் இந்தப் பெருமையுடைய தருணத்தில், பத்திரிகைக் குழுமத்தினர் அனைவருக்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**நாகலிங்கம் வேதநாயகன்**
ஆளுநர்
வடக்கு மாகாணம்

# பல்லாண்டு காலம் பணி தொடரட்டும்!



உதயன் பத்திரிகை தனது 41ஆவது அகவைக்குள் காலடி வைப்பதையிட்டு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். மிகச் சிக்கலான அரசியல் பொருளாதார சூழ்நிலை நிலவிய காலத்திலும் தளராது தொடர்ச்சியாக வெளிவந்த உதயன் பத்திரிகை இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவகையில் இணையப் பத்திரிகையாக பரிமாண வளர்ச்சியடைந்து மக்களுக்குத் தன் பணியாற்றிவருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

நாட்டு நடப்புகள், சமூகத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகள் மற்றும் பயனுள்ள பல விடயங்களையும் மாணவ சமுதாயத்திற்கு பயன்தரக்கூடிய அறிவியல், ஆன்மிகம் மற்றும் கல்வி தொடர்பான விடயங்களையும், தெரியப்படுத்தும் ஒரு பத்திரிகையாக உதயன் விளங்குகின்றது என்பதனை யாரும் மறுத்துவிடமுடியாது. அந்தவகையில் உதயனின் 41ஆவது அகவைச் சிறப்பிதழ் சிறப்புற வெளிவரவும், இந்நாளிதழ் மேலும் பல்லாண்டு காலம் மக்கள் பணி தொடர்ந்திடவும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்,**
மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.



# நவீன ஊடகங்களுக்கு மத்தியில் மிடுக்குடன் வீறுநடை

தமிழ் ஊடகப்பரப்பில் தனக்கென தனித்துவமான முத்திரையைப் பதித்துள்ள உதயன் பத்திரிகையானது இன்றைய தினம் 41ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

உதயன் கடந்து வந்த பாதைகள் மிகவும் கரடுமுரடானவை. நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் முதலான பல்வேறு தடைகளையும் தாண்டி இத்தனை வருடங்களாக இன்றைய ஊடக யுகத்தில் திகழ்ந்து வருவதென்பது மிகவும் இலகுவான விடயமல்ல. இதற்கு வாசகர்கள் கொடுக்கின்ற மதிப்பே பிரதான காரணமாகும்.

நவீன ஊடகங்களின் வருகையால் அச்சு ஊடகங்களின் எதிர்காலம் பாதிப்புக்குள்ளாகும் எனப் பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்ற நிலையில், உதயன் பத்திரிகையானது கால ஓட்டத்திற்கேற்ப தன்னை வடிவமைத்துக்கொண்டு, புதுமைகளைப் புகுத்தி கால மாற்றத்திற்கேற்ப இன்றைய ஊடக யுகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

உதயன் பணி சிறக்க அயராது உழைக்கும் முகாமைத்துவக் குழுவினர், ஆசிரியர்கள் மற்றும் பணிக்குழாமினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சு.முரளிதரன்,**
மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.



# தளராமல் ஒலிக்கும் ஊடகக் குரலோன்!



நான்கு தசாப்தங்களை கடந்துவந்து, 41ஆவது ஆண்டுக்குள் கால்பதிக்கும் அன்புநாளிதழ் உதயனுக்கு எனது ஆசியையும், வாழ்த்துகளையும் வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

தமிழ் மண்ணில் நாற்பது பெரும் ஆண்டுகளாக 'சற்றும் தளராமல் ஒலித்துக்கொண்டிருக்கும் ஊடகக் குரல் உதயன்' என்று கூறுவது மிகப் பொருத்தமாய் அமையும் என்று எண்ணுகின்றேன். உள்ளூர் விடயங்கள், அரசியல், சமகால செய்திகள் எனப் பல பரப்புக்களையும் அலசி ஆராயும் உதயன் சமூக ரீதியாக கவனிக்க வேண்டிய, சமூகத்தில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகள் பலவற்றையும் வெளிக்கொணர்ந்து மக்கள் முன்நிறுத்தி காட்டுவது பல சமூக மாறுபாடுகளைத் தடுப்பதற்கு பெரிதும் துணைநிற்கின்றது எனலாம்.

'எங்கு எப்படியெல்லாம் அறத்தைச் செய்யமுடியுமோ அங்கெல்லாம் இயன்றவரை அறத்தைச் செயற்படுத்துவதே சிறப்பு' என்பதற்கிணங்க பத்திரிகைத் தர்மத்துடன் வீறுநடை போட்டு வலம்வரும் சிறப்பு உதயனுக்கே உரியது.

அந்த வகையில் உதயன் நாளிதழ் 40 வருடங்களைக் கடந்து வந்திருப்பதானது, அதன் கடின உழைப்பினாலும், இடைவிடாத முயற்சியாலும் என்றால் அது மிகையாகிவிடாது. இலக்கியம், வாழ்வியல், அரசியல், பொருளாதாரம் என்ற பல துறைகளையும் இணைத்து, ஒழுங்குபடுத்தி பயணித்துக் கொண்டிருக்கும் உதயன் இன்னும் பல அகவைகள் கண்டு நீண்டு நிலைக்க வாழ்த்துவதுடன், இதற்காக உழைக்கும் பத்திரிகைகங் குழுமத்தை மனதாரப் பாராட்டி இவர்களது பணிதொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

**க.கனகேஸ்வரன்**
மாவட்ட செயலாளர்
மன்னார்.

# செய்திப் பணிகளுக்கு நிகராக சமூகப் பணியும் ஆற்றுபவன்!



உதயன் பத்திரிகையின் பிறந்ததின சிறப்பிதழுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றுவரும் பத்திரிகைகளில் ஒன்றாக பல்வேறு சமூகப் பணிகளை ஆற்றிவரும் உதயன் பத்திரிகை தொடர்ந்தும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துகள்.

நவீன தொழிநுட்ப வளர்ச்சிகளுக்கேற்ப உள்நாடு மட்டுமன்றி உலக அளவிலான அரசியல், பொருளாதார, கலாசார, பொழுதுபோக்கு உட்பட பல்வேறு துறைகள் சார்ந்த பலதரப்பட்ட செய்திகள் மற்றும் ஆக்கங்களை உலகளவில் பரந்து வசிக்கும் தமிழ்பேசும் வாசகர்களிடையே கொண்டு சேர்த்தல் மிகப்பெரும் பணியாகும்.

தனது 41 ஆவது வயதினை அடையும் உதயன் பத்திரிகைக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் உதயன் குழுமத்தினருக்கு சமூகத்தில் தனக்கான பொறுப்பினைக் கருத்திற்கொண்டு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படவும், மென்மேலும் பணி சிறப்புறவும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ப.அ.சரத்சந்ர,**
மாவட்டச் செயலாளர்,
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சர்வதேச விருது வென்ற ஒரேயொரு தமிழ் ஊடகம்**

**1985 2025**

## வாசகர்களின் மனங்களை செய்திகளால் வென்றவன்



'மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்' என்ற மகுட வாக்கியத்துடன் செயற்பட்டுவரும் உதயன் நாளிதழானது துல்லியமானதும் நம்பகமானதுமான செய்திகளால் வாசகர்களின் மனதை வென்றுள்ளது.

நாற்பது ஆண்டுகளாக இடைவிடாது வெளிவரும் உதயன் நாளிதழானது நாற்பத்தோராவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பது அதனுடைய வாசகர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான ஒரு விடயமாகும்.

அச்சடிக்க தாள்கள் அற்ற நாள்களிலும் செய்திகளை அறிய வழியற்ற வேளைகளிலும் தொடர்ச்சியாக உதயன் வெளிவந்தது என்பதும் மட்டுப்படுத்தப்பட்ட சிறப்புப் பிரசுரங்களாக சில பக்கங்களில் மாலைப் பத்திரிகை வெளிவந்தபோது அதற்காகக் காத்திருந்து வாசித்த நாள்களெல்லாம் இன்றைய தலைமுறை அறியாத உதயனின் சிறப்புகளாகும்.

இன்றைய சமூக வலைத்தள காலத்தில், செய்திகளுக்காக பத்திரிகைகளை மாத்திரம் நம்பியிருக்காத தலைமுறையொன்று உருவாகியுள்ள சூழலில், காலத்திற்கேற்ப மாற்றங்களுடன் இளம் தலைமுறையையும் உள்ளீர்க்கும் அம்சங்களுடன், அச்சுப் பத்திரிகையாக தொடர்ந்து உதயன் வெளிவந்து ஆண்டுகள் பல நீடித்து நிலைக்க வாழ்த்துகிறேன்.

**டெ.க.அரவிந்தறாஜ்,**
பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு.

## உண்மையின் குரலாய் உரத்து ஒலிக்கின்றான்



ஈழத்தமிழ் மண்ணில் 40 ஆண்டுகளாக உண்மையின் குரலாய் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும் 'உதயன்' இன்று 27ஆம் திகதி தனது 41ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்துவைக்கிறது. இதனை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

ஈழத்தமிழரின் கனவுகளைத் தனது வாழ்நாள் இலட்சியமாக வரித்துக்கொண்ட உதயன், அதற்காகக் கொடுத்த விலைகளும் இழப்புகளும் ஏராளம். ஆனால், எதற்கும் துவண்டு போகாமல் உதயன் இன்றுவரை வீறுநடை போடுவது அதன் தனித்துவமும் பெருமையுமே ஆகும். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியின் பயனாக கணினி, தொலைக்காட்சி, கைத்தொலைபேசிகளில் இன்றைய இளந் தலைமுறைகள் மூழ்கியுள்ள இந்தக் காலத்திலும் உதயன் நாளிதழ் சிறப்பாக வெளிவருவது போற்றுதற்குரியது.

செயற்பாட்டுத் தளத்தில் பல சவால்களையும் அழுத்தங்களையும் எதிர்கொண்டாலும் அவற்றை மீறி உதயன் நாளிதழ் பல மகத்தான பணிகளைத் தொடர்ந்து ஆற்றி தான் சார்ந்த மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்து வெற்றியோடு வீறுநடை போடுகின்றது.

இவ்வருடம் 41ஆம் ஆண்டில் கால் பதிக்கும் உதயன் பத்திரிகைக்கும் அதன் சாதனைகளை பதிவு செய்யும் ஆவணமாக வெளிவரும் சிறப்பு மலருக்கும் எனது இதய பூர்வ வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு இப்பணிக்கு முன்னின்று உழைக்கும் நிர்வாகத்தினர், ஆசிரிய பீடத்தனர், பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துப் பணிகின்றேன்.

**த.ஜெயசீலன்,**
பிரதேச செயலாளர், பச்சிலைப்பள்ளி.

## நெருக்கடிக் காலங்களிலும் திறம்படப் பணிசெய்தவன்!



யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் உதயன் நாளிதழ், தனது பத்திரிகைப் பணியின் 40 ஆண்டு காலத்தை மிக வெற்றியுடன் நிறைவு செய்து. 41ஆவது ஆண்டில் காலடி வைக்கும் இத்தருணத்தில் எனது இதய பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு பத்திரிகையானது தினசரிப் பத்திரிகையாக வெளிவருவது என்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. ஆனால் உதயன் நாளிதழ் மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும். மக்களுக்கான பல்வேறுபட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிவிப்பதில் தனது பெரும்பணியை ஆற்றிவந்திருக்கின்றது.

இந்த நாளிதழ் தனது செய்திப்பணியில் மிகுந்த சவால்களை எதிர்கொண்டாலும் வெள;வேறு காலகட்டங்களில் செயற்பட்ட ஆசிரியர் குழுவினர் செய்தியாளர்கள், மற்றும் பத்திரிகை நிறுவன ஊழியர்கள் மற்றும் அதன் நிர்வாகிகளின் கடின உழைப்பாலும், அர்ப்பணிப்பான துணிச்சலான செயற்பாடுகளாலும், 40 வருடத்தை வெற்றிகரமாகக் கடந்து நிற்கும் இத்தருணத்தில் பெருமையோடு வாழ்த்தி நிற்கின்றோம்.

பத்திரிகையின், தூரநோக்கு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு, அதன் பொருளாதார ரீதியாக நிலைத்து நிற்கும் ஆற்றல், மக்களுக்கான செய்திப்பணியின் கடந்த கால வரலாற்று அனுபவம் போன்ற பிரகாசமான வெற்றிப்பாதையில் தனது 41ஆவது ஆண்டில் கால் பதிக்கும் உதயன் நாளிதழ் மக்களின் தேவையறிந்து அவர்களுக்கான செய்திப்பணியை இனிவரும் காலங்களிலும் சிறப்புடனும் பொறுப்புடனும் ஆற்றுவதற்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எப்.சி.சத்தியசோதி**
பிரதேச செயலாளர், தென்மராட்சி





## தடம் மாறா தனியிதழ் உதயன்



தமிழ் மக்களின் உணர்வுடனும் உரிமையுடனும் கலந்து உறவாடி வளர்ந்த உதயனுக்கு இன்று அகவை 41 எம் தேசத்தின் விடிவிற்காய் இத்துணை நீண்ட காலம் உழைத்த ஒரே தமிழ் நாளிதழ் எனும் பெருமை எம் உதயனைத் தவிர வேறு எதற்கும் வாய்க்கவில்லை.

கடந்த 40 ஆண்டு காலமாக பல்வேறு இன்னல்கள், நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், பழிவாங்குதல்கள், தாக்குதல்கள், சொத்தழிப்புக்கள், உயிர் இழப்புக்கள் என ஆற்றெணாத் துயரங்கள் அனைத்தையும் எதிர்கொண்டபோதும் தான் கொண்ட கொள்கையில் மாறாது இலட்சிய வேட்கையோடு தன் பயணத்தை தொடர்கிறான்.

அல்லற்பட்ட எம் இனம் விடிவு தேடி ஆர்ப்பரித்து நிற்கும் இவ்வேளையில் உதயன்போல் ஓர் இன உணர்வை வெளிப்படுத்தும் இலட்சியப் பத்திரிகை ஒன்று தன் கனதி குறையாது காத்திரமாக வெளிவரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அவ்வகையில் உதயன் பத்திரிகை ஆசிரியர் குழுவும் நிர்வாக இயக்குனரும் தடம் மாறாது இன்னும் பல்லாண்டுகள் பயணித்து நூற்றாண்டு கண்ட நாளிதழாக உதயன் உதயமாக வாழ்த்துகின்றேன்.

**த.முகுந்தன்**
பிரதேச செயலாளர்,
கரைச்சி.

## தமிழர்களின் தனிப்பெரும் குரலானவன்!



ஈழமண்ணிலிருந்துதமிழ் பேசும் மக்களின் தனிப்பெரும் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் உதயன் பத்திரிகையின் 41ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 40 வருடங்களாக பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு தனது செய்திகளை அனைவருக்கும் வழங்கி வாசகர் மனங்களைக் கவர்ந்து தனது பணியை தொடர்ந்து வரும் உதயன் பத்திரிகைக்கு எனது முதற்கண் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்றைய காலம் தொட்டு இன்றுவரை பத்திரிகைகளுக்கு என்று வாசகர்கள் மத்தியில் தனியிடம் உண்டு. அந்தவகையில், எமது பிரதேச மக்களின் மனங்களில் நீங்கா இடம்பெற்றுள்ள உதயன் பத்திரிகை எம் மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்து அவர்களுக்கு பல நல்ல சிந்தனைகளை வழங்கி பயன் தருகிறது என்பதில் ஐயமில்லை.

உதயன் பத்திரிகை இனிவரும் காலங்களிலும் பல வளர்ச்சிகளைக் கண்டு முன்னணியில் திகழ பத்திரிகைக் குழுவுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இ.பிரதாபன்**
பிரதேச செயலாளர்,
வவுனியா



## நம்பிக்கை நாயகனாக தரணியில் தொடரட்டும்

தமிழுக்கே சிறப்பாகத் திகழும் பத்திரிகையாக வளர்ந்து உயர்ந்த உதயன் பத்திரிகை, இன்று தனது 40 ஆண்டுகால வெற்றிப் பயணத்தை நிறைவு செய்து 41ஆம் ஆண்டு பயணத்தைத் தொடங்குவதில், நாமும் இணைந்து அளவிடமுடியாத மகிழ்ச்சி அடைகின்றோம்.

பத்திரிகை என்பது மக்களின் நாளாந்த வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து, உலகின் நிகழ்வுகளைப் பதிவு செய்து மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கியமான ஊடகமாகும். 1985ஆம் ஆண்டு தனது பயணத்தைத் தொடங்கியதிலிருந்து, உதயன் பத்திரிகை நாட்டின் நெருக்கடியான காலங்களிலும் தடையின்றிச் சேவை செய்த பத்திரிகையாக தன்னை நிலைநாட்டியுள்ளதுடன் உண்மையையும் நேர்மையையும் தழுவிய செய்திகளின்மூலம் மக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது. மக்களுக்கு உடனுக்குடன் நாளாந்த செய்திகளை வழங்குவதிலும், வாடிக்கையாளர்களுக்கான தனித்துவமான மற்றும் நம்பகமான விளம்பரச் சேவையிலும். மேலும் விளையாட்டு, கலை, அறிவித்தல்கள் உள்ளிட்ட துறைகளிலும் முக்கியமான பங்கு வகித்துவருகின்றது.

இவ்வாறு பல துறைகளில் சிறந்து விளங்கும் உதயன் பத்திரிகை 41ஆவது அகவையில் கால் பதிக்கும் இவ்வேளையில், இதன் நிர்வாகத்தினருக்கும், ஆசிரியர் குழுவினருக்கும். அனைத்து பணியாளர்களுக்கும் எங்களது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வே.ஆயகுலன்,**
பிரதேச செயலாளர், பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் தியாகத்தை உலகம் நன்கு அறியும்



41 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் உதயன் நாளிதழுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி உதயன் குடும்பத்தின் கூட்டு மகிழ்வில் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

இலத்திரனியல் ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் ஊடகப் பரப்பில் நுழைந்து ஆதிக்கம் செலுத்தும் காலகட்டம் ஒன்றிலேயே நாம் வாழ்கின்றோம். அவற்றிற்கும் சவாலாக அச்சியந்திர ஊடகப்பரப்பில் உதயனின் தனித்துவமும் அங்கீகாரமும் தனியான இடத்தில் நிமிர்ந்து நிற்கின்றன. இது யாராலும் மறுக்கப்பட முடியாதது.

உதயன் குழுமம் கடந்த காலத்தில் சந்தித்த சவால்கள் இந்த உலகம் அறிந்த விடயங்களே. அத்தனை சவால்களையும் தாண்டி உதயன் இன்றும் பலத்துடன் பக்கச்சார்பின்றி நம்பிக்கையான நுகர்வினை ஏற்படுத்தியிருப்பதையும் உலகம் அறியும்.

உலகம் உள்ளவரை உதயன் உயிர் வாழவேண்டும் என்பது தமிழ்தேசத்தின் ஒட்டுமொத்த வாழ்த்தாக அமைகின்றது. நாமும் உதயனையும் உதயன் குழுமத்தின் ஒவ்வொரு உழைப்பாளிகளையும் வாழ்த்தி நிற்கின்றோம்

**சுந்தரலிங்கம் காண்டீபன்**
மாநகரசபை முதல்வர், வவுனியா

## ஈழத் தமிழரின் துயரை பறைசாற்றிய உதயன்



ஈழத் தமிழரின் துயரை பறைசாற்த்த உதயமான உதயனின் பயணம் 41 ஆவது அகவையில் காலடி வைக்கின்றது.

தமிழ் மக்கள் ஏதிலிகளாக நாலா திசையும் சிதறி ஓடியபோது தமிழனின் அவலத்தை எடுத்து வந்தது மட்டுமல்ல நாலா திசையின் நிகழ்வையும் ஈழத்தின் ஒவ்வொருவர் கரத்துக்கும் கொண்டு வந்த ஒரு சில ஊடகங்களில் உதயனின் பங்கும் முக்கியமானது. எந்த நேரத்திலும், எதற்கும் அஞ்சாது துணிச்சலோடு செய்தியறிக்கையிட்ட காலம் ஒன்று உதயனுக்கு மட்டுமே இருந்த போற்றதகு காலமும் இருந்தது. அது போற்றத்தகு பணியாளர்களின் அயராத, அசராத அர்ப்பணிப்பின் ஊடகத்துறையின் மிடுக்கான பணியை எடுத்து இயம்பியது. 41 ஆண்டு காலம் என்றால் அது கையால் அச்சுக்கோர்த்த காலம் முதல், செல்லடி, துப்பாக்கிச்சூட்டுக் காலம் மட்டுமல்ல, பதுங்குகுழி வாழ்வியல் காலத்திலும் உதயன் பொங்கியெழுந்தான். எனது நினைவு சரியெனில் ஒரு ரூபா 50 சதத்துக்கு உரிய தாளில் அச்சிட்டு கொப்பித்தாள், றோணியோத் தாள் அல்லது கிடைத்த தாளில் தடைக் காலத்திலும் நேர்மையோடு வெளிவந்தது உதயனே. இந்த அர்ப்பணிப்பு உதயனை பார்க்காது காலை தேநீரைக்கூட அருந்தாமல் வழிமேல் விழி வைத்து காத்திருந்த காலங்கள் கடந்தும் இன்றும் உதயன் பயணிக்கின்றது. அதே துணிச்சலோடு, அதே மிடுக்கோடும், அறத்தின்பால் பயணித்தும் தொடர்ந்தும் உதயமாக வேண்டும் என வாழ்த்தி உதயனின் சேவை தொடர வாழ்த்துரைக்கின்றேன்.

**திருமதி.வி.மதிவதனி,**
முதல்வர்.
யாழ். மாநகர சபை





## உதயனின் கரங்களை பலப்படுத்த இணைவோம்



உதயனின் 41ஆவது பிறந்த தினத்துக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது ஈழத்தமிழ் மண்ணில் 40 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கும், மண்ணுக்குமாக தனது பணியைத் திறன்பட நடத்திக் கொண்டிருக்கும் உதயன், மென்மேலும் தனது சேவையைத் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின்மீது உதயன் கொண்டுள்ள பற்று அப்ரிமிதமானது. தமிழ்த் தேசியத்தின் பெருவிருப்பை தன் வாழ்நாள் இலட்சியமாக உதயன் வரித்துக் கொண்டுள்ளமை தமிழ்த் தேசியத்துக்குக் கிடைத்த வரமாகவே அமைந்துள்ளது.

எமது தேசத்தை நேசித்து அதற்க்காக உயரிய சிந்தனையுடன் யார் பாடுபடுகின்றார்களோ அவர்களுடன் நாம் எப்போதும் பக்கபலமாக இருக்கவேண்டும். எனவே அவ்வாறான உயரிய நோக்கத்துடன் சிறந்த முயற்சியுடன் எமது தேசியத்துக்காக எமது மண்ணில் சிறந்த சேவையைச் செய்து வருகின்றது உதயன்.

எதற்காகவும் நாம் வீழ்த்தப்படலாம் ஆனால் எமது இனத்துக்காக குரல் கொடுப்போம்.

**கிருஷ்ணவேணி திருநாவுக்கரசு**
தவிசாளர்
வவுனியா வடக்குப் பிரதேசசபை

## உதயனின் உதயம் தொடரட்டும்



எமது ஈழத்தமிழ் நாட்டிலே தமிழ் மக்களின் குரலாக கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக உதயமாகிக் கொண்டிருக்கும் உதயனுக்கு மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் தேசத்தில் எங்கள் இனத்தின் விடிவுக்காகக் குரல் கொடுக்கும் உன்னத இதழாக உதயனை நான் பார்க்கின்றேன். நான்கு தசாப்தங்களைக் கடந்தும் தன்நிலை மாறாத அறப்பணியை மக்களின் கரங்களில் கொண்டு போய் சேர்க்கும் அரிய பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் உதயனின் 41வது உதய தினத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழ் மேன்மை பெறவேண்டுமென்றும் உதயனின் பணி மேலும் வளர்ந்து மக்கள் மனங்களில் அழியாது இடம்பெறவேண்டுமென்றும் எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி அமைகின்றேன்.



**பா.பாலேந்திரன்**
தவிசாளர்
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை

## தமிழ்த் தேசியத்தின் புதிய அத்தியாயம்!



ஈழ மண்ணில் நெருக்கடி நிறைந்த தருணத்தில் உதயமாகி, எம் தேசத்தின் விடுதலைக் கனவின் தாகத்தை உதயன் தாங்கி நிற்கின்றான்.

உதயனின் நான்கு தசாப்தம் கடந்த பயணம் என்பது நெருப்பாற்றை நீந்திய பயணமே. அரச பயங்கரவாத நெருக்கடிகள் எனப் பல அச்சுறுத்தல்களை உதயன் கடந்து வந்திருக்கின்றான். எனவே தமிழ் தேசியத்தின் உயிர்ப்புக்கு வலுவாகத் திகழும் உதயனுக்கு எனது வாழ்த்துகள்.

**சின்னராசா லோகேஸ்வரன்**
தவிசாளர்
கரைதுறைபற்றுப் பிரதேசசபை



## சோதனைகள் அனைத்தையும் சாதனைகளாக மாற்றியவன்!



தமிழ்த்தேசிய ஊடகப்பரப்பில் 40 ஆண்டுகளாக மிளிர்ந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை, 41ஆவது ஆண்டுக்குள் இன்று காலடி வைக்கின்றான்.

ஈழத்தமிழ் மண்ணில் தனக்கென தனி இடத்தை தக்கவைத்துள்ள உதயனின் பயணம் அற்புதமானது. உதயனின் இந்தப் பயணம் இலகுவானதொன்று அல்ல. இந்த நீண்ட வரலாற்றில், தாக்குதல்களையும், கொலைகளையும், அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் எதிர்கொண்டே உதயன் பயணித்திருக்கின்றான். ஆனாலும் தனது பயணத்தில் சமரசம் ஏதுமின்றி முன்னோக்கிச் சென்றுள்ளான் உதயன்.

தான் சார்ந்த மக்களின் உரிமைக்கான குரலாக உதயன் ஒலித்துக்கொண்டே இருக்கின்றான். உதயனின் பயணம் நீண்டு நிலைத்திருக்க வேண்டுமென்பதே எங்களின் பேரவா!

**சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன்**
தவிசாளர்
பூநகரி பிரதேச சபை

## அச்சுறுத்தலுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து நின்றவன்

இலங்கை ஊடக வரலாற்றில் தனித்துவமான மொழிச்சுவையும் மெய்ப்பொருளும் கொண்டு நாற்பதாண்டுகளாக தமிழர்களின் குரலாகத் திகழ்ந்துவரும் உதயன் நாளிதழ் தனது 41ஆவது பிறந்த தினத்தினை சிறப்பாகக் கொண்டாடுவதை மனமார வரவேற்று மகிழ்கின்றேன். நாடும் சூழலும் மாற்றமடைந்த காலகட்டங்களில், அவலங்களையும் சவால்களையும் எதிர்கொண்டபோது, உண்மையையும் நேர்மையையும் வெளிப்படுத்திச் செயற்பட்ட உதயன் நாளிதழ் வடபகுதி மக்களின் சமூக உணர்வுக்கு வலிமை சேர்த்த முக்கியமான தூணாக இருந்து வந்துள்ளது.

தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றின் பக்கங்களை தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் சூடுதணியாமல் கடத்தியது மட்டுமல்லாமல், தமிழ்த் தேசிய இனம் அனுபவித்த அவலங்களையும் வலிகளையும் சர்வதேச ரீதியிலும் உள்ளூர் மட்டத்திலும் வெளிப்படுத்தி அச்சுறுத்தலுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து நின்ற ஓர் ஊடகம் உதயன் நாளிதழ் ஆகும்.

தனது நாற்பதாவது வருடத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து 41 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த நேரத்தில் இதழின் நிர்வாக குழுவுக்கும், ஆசிரியர் குழுவுக்கும், தன்னலமின்றி உழைக்கும் நிருபர்களுக்கும் அதனை அன்புடன் ஆதரிக்கும் வாசகர்களுக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். உதயன் நாளிதழ் மேலும் உயர்ந்து தனது உண்மைச் செய்தி உரைக்கும் பண்பைத் தொடர்ந்து நம் சமூகத்தின் முன்னேற்றப் பயணத்தில் ஒளிக்கொடி ஏந்தி நிற்க எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

**சுப்பிரமணியம் சுரேன்,**
தவிசாளர், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழைகளின் தோழனாக புதுப்பொலிவுடன் வருபவன்

எமது சமுதாயத்துக்கு விழிப்புணர்வையும் அறிவுசார் வளர்ச்சியினையும் வழங்குவதில் பத்திரிகைகள் முக்கியமான பங்காற்றுகின்றன. கடந்த நான்கு தசாப்பதங்களாக உண்மை, நேர்மை, பொறுப்பு ஆகியவற்றை மூலக் கொள்கையாகக் கொண்டு மக்களுக்குச் சரியான செய்திகளை வழங்கி சமூக நலனோடு செயற்படுகின்ற உதயன் பத்திரிகையின் 41 ஆவது அகவைநாள் சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இடர்மிகுந்த காலங்களில் பொருளாதார தடைகளுக்கும் அப்பால் நாட்டு நடப்புக்களை மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் கடினமான அட்டைகளில் கனதியான விடயங்களை தாங்கி வந்து மக்களின் குரலாக ஓங்கி ஒலித்த, உதயனின் தடங்களை போற்றாதிருக்க முடியாது. ஊழல், அநீதி, பக்கச் சார்பான ஆட்சி, அதிகாரம், மனித உரிமைமீறல், சிறுவர் மற்றும் பெண்கள் உரிமையென அனைத்துக்கும் தனது எழுதுகோலை உயர்த்திய உதயன், கலை, இலக்கியம், பண்பாடு, பாரம்பரியம், அறிவியல், பொருளாதாரம், பொழுதுபோக்கு என அனைத்துத் துறைகளிலும் தமக்கு ஒப்பாரும்மிக்காருமின்றி இன்றி ஜனநாயகத்தை வலுப்படுத்தித் தொன்மைத்தமிழ் மிடுக்குடன் உரிமைக்குரலாக, நடுநிலை தவறாது இனத்தின் காவலனாகச் செயற்பட்டு வரும் நிலையில் ஆண்டுகள் கடந்து நூற்றாண்டு தாண்டியும் ஏழைகளின் தோழனாக புதுப்பொலிவுடன் வெளிவர எல்லாம் வல்ல இறையருளை பிரார்த்தித்து வாழ்த்துக் கூறுவதில் நிறைவடைகின்றேன்.

**குமாரசாமி பிரபாகரமூர்த்தி,**
பிரதேச செயலாளர், சண்டிலிப்பாய்

## தொடரட்டும் பயணம்



உதயன் சஞ்சீவி பத்திரிகையின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

40 ஆண்டுகள் எனும் நீண்ட பயணத்தில் உதயன் மக்களுக்குத் தேவையான பல விடயங்களை மக்களோடு பகிர்ந்து கொண்டுள்ளான். இந்த நெடும் பயணத்தில் 'உதயன்' எதிர்கொண்ட சவால்கள் பல.

தமிழ் மக்களுக்காகவும் தேசியத்திற்காகவும் பலமாகக் குரல் கொடுத்து தன் பாதையில் முன்னோக்கி வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கும் 'உதயன்' மக்களின் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டுள்ளான் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கும் உதயனின் குரல் தொடர்ந்தும் ஒலித்து வெற்றிகரமாக பயணிக்க வாழ்த்துகின்றேன்.

**எஸ்.தயாபாலன்**
செயலாளர்
யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம்




## தேசியத்தின் பத்திரிகையாக தலைநிமிர்த்துள்ளான் உதயன்



உதயன் பத்திரிகை எமது பிரதேசத்தில் 40 வருடங்கள் அரும்பணியாற்றி இப்பொழுது 41ஆவது வயதில் காலடியெடுத்து வைத்துள்ளது.

உதயன் ஆரம்பித்த காலத்தை எண்ணிப் பார்க்கின்றேன். எமது பிரதேசம் உள்நாட்டுப் போராலும், இடம்பெயர்வுகளாலும் அல்லற்பட்டுக் கொண்டிருந்த காலம். இக்கால கட்டத்தில் பல பத்திரிகைகள் புற்றீசல் போல் முளைத்து மறைந்துவிட்டன. உதயனின் மன உறுதியும் நேர்மையும் போற்றற்குரியன.

அரசாங்கத்தினாலும் அரசியல் எதிரிகளினாலும் உதயனுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் அநேகம். எதற்கும் அஞ்சாது 40 வருடங்களாக இந்தப் பத்திரிகை மக்களுக்காக உழைத்து வருகின்றது. செய்திகளுக்குரிய பண்புகளான காலம், இடம், உடனடியானவை, முதன்மையானவை, நிகழ் இடத்திலேயே கிடைப்பவை, விளைவுகளையுடையவை,

வியப்புக்குரியவை, உணர்வுபூர்வமானவை எனும் பண்புகளை உதயனில் காண்கிறேன். உதயனின் தனிச்சிறப்பு பக்கச்சாரமையாகும். இதனால் உதயன் வழங்கும் செய்திகளையும் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளையும் உலகெங்கும் வாழும் தமிழ்மக்கள் கருத்தூன்றிப் படிக்கின்றனர். உதயன் தேசிய பத்திரிகையாக வளர்ந்துவிட்டதனைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி எஸ்.ஜெபநேசன்**
முன்னாள் பேராயர்

## ஊடக தர்மத்தில் நடுநிலையானவன்

உண்மையின் குரலாக, ஊடக தர்மத்தின் நடுநிலையாய், தனித்துவமிக்க குரலாய் மக்களின் சிங்காரமிட்டு நாற்பது ஆண்டுகளின் சுவடுகளைத் தாண்டி என்றும் இதயங்களில் தமிழ் பரப்பி நிற்கும் உதயன் நாளிதழுக்கு அகவை தின வாழ்த்துகளை பகிர்வதில் பேருவகை கொள்கின்றேன்.

இலட்சியப் பயணத்தில் இன்றுவரை கொள்கை மாறாது, கருத்தியலில் தடம்புரளாது காலத்தின் பிரதிபலிப்பாய் நித்தம் உதயமாகும் தனிச்சிறப்பு உதயனுக்கே உண்டு. மக்கள் ஆட்சியை உயிர்ப்போடும் உண்மையோடும் எப்போதும் வைத்திருக்கும் ஆற்றலாக உதயன் மிளிர்கின்றான். வாசிப்பின் மாற்றங்களிலும், தொடுதிரை வாசிப்புகளிலும் காணாமல் போய் விடாது, தாங்கிவரும் செய்திகளில் எதிர்பார்ப்பை எப்போதும் சோர விடாமல் சாமானியர் முதல் சாதனையாளர்வரை இன்றும் தன் அணைப்பில் வைத்திருப்பதில் உதயனுக்கு நிகர் உதயனே. கட்டிறுக்கம் மிக்க பணியாலும், தனித்துவம் மிக்க அடையாளத்தாலும் விடியற்காலை பொழுதுகளை இன்னும் தன் தாள்களுடனே உதயன் விடியச்செய்வதும் சிறப்புக்குரியதே.

தீமைகளின் புரையோடல்கள் புகுந்துபோய் இருக்கும் ஒரு சமூகத்தில் அந்த புரையோடிகளைச் சமூகத்துக்கு புலப்படுத்தி வினைத்திறனோடு விலைபோகாமல் சுமந்து கொண்ட துயரின் தளும்புகளை மறந்து விடாது தன்தடம் மாறாத்தமிழ் தேசிய ஊடகப் பணிக்காக உயிர்களை விலையாகக் கொடுத்து இன்றுவரை தனது பயணத்தை சிறப்புடன் ஆற்றிவருகின்றான். இந்த ஊடகப்பணியில் துணைநின்ற மற்றும் துணை நிற்கும் ஒவ்வொருவருக்கும் மனதார வாழ்த்துகளை பகிர்வதோடு தளர்ந்துவிடா பொறுப்புணர்வுடன் எப்போதும் தரணியில் மிளிர நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவலிங்கம் அசோக்குமார்**
தவிசாளர்
வேலணை பிரதேச சபை.

## தொடரட்டும் உன்னதப் பயணம்...!

ஈழவள நாட்டின் யாழ். குடாநாட்டிலே உதய சூரியனாய் நாள்தோறும் உதயமாகும் உதயன் பத்திரிகை, 41ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அகவைதின நாளில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

உலகச் செய்திகள், உள்ளூர் செய்திகள், ஆசிரியர் தலையங்கம், கட்டுரை, ஆன்மிகம், பொழுதுபோக்கு என பல்துறை ஆக்கங்களையும் சேர்த்தொன்றாய் திரட்டிச் செம்மையுடன் வெளிவரும் உதயன் பணிதொடர வாஞ்சையுடன் வாழ்த்துகின்றேன். உலகெங்கும் உள்ள தமிழர்தம் மனம் கவர்ந்து உத்திகள் பலகொண்டு உன்னதமாய் வெளிவரும் உத்தமன் உதயனும் உலகம் உள்ளவும் உலகச் செய்திகளையும் உள்ளூர் செய்திகளையும்

உண்மையுடன் வெளிக்கொணர உழைத்திட வேண்டுமென்றே உலகளந்த மாயவனின் உன்னதத் தாள் பணிந்தே உளமகிழ்ந்து வாழ்த்துகின்றேன் வாழியவே!

**கி.கமலராஜன்**
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி

## இதய தாகம் தீர்க்கும் உதயனே நீடு வாழ்க!

எமது அபிமானப் பத்திரிகையாகிய உதயன் நாளிதழுக்கு இன்று 41ஆவது பிறந்தநாள். 40 ஆண்டுகள் பூர்த்தியாகி 41ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் இனிப்பான நன்னாள். யாழ்ப்பாணத்தில் அச்சாகி வெளிவரும் பத்திரிகைகளில் முதன்மை வகிக்கும் நாளிதழாக மலர்ந்து வாசகர்களின் மனங்களில் நீங்கா இடத்தைப் பிடித்துள்ள உதயனுக்கு நிகர் உதயனே!

எதையும் துணிந்து கூறும் அஞ்சா நெஞ்சு படைத்த உதயன் நாளிதழுக்கு 'துணிச்சலான பத்திரிகை' என்ற விருதும் கிடைத்திருக்கின்றது. ஒவ்வொரு நாளும் உதயனைப் பார்த்த பிறகே நாம் எமது அன்றாடப் பணிகளை ஆரம்பிக்கின்றோம். அர்த்தம்மிக்க ஆசிரியத் தலையங்கத்துடன் ஆழமான கருத்துகளைப் பகிர்வதில் உதயன் முதன்மையும் சிறப்பும் கொண்டவன். உண்மை, அஞ்சாமை, நடுநிலைமை என்று நிலையாக நிமிர்ந்து நின்று உதயவேளையில் வந்து எங்களுடைய கரங்களில் தவழும் 'உதயன்' நாளிதழ் இன்னும் நன்கு ஓங்கி வளர்ந்து சிறப்புறத் திகழவேண்டும் என்று எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து மனமுவந்து வாழ்த்துகின்றோம். உதயன் குழுமத்தலைவரும் ஆசிரிய பீடத்தினரும் ஆற்றும் பணி மகத்தானது. நிர்வாகத்தினரும் அனைத்து ஊழியர்களும் சிறப்புடன் நலமே வாழவேண்டும் என்று இறையாசி வேண்டி நிற்பதில் அகமிக மகிழ்கின்றோம்.

**கலாபூணம் இராசையா ஸ்ரீதரன்**
ஆன்மிக எழுத்தாளரும்
வில்லிசைக் கலைஞரும்

## சர்வதேசம் வரை ஓங்கி குரல் கொடுப்பவன் உதயன்



துணிச்சல்மிக்க ஆளுமை கொண்ட தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கும் உதயன் பத்திரிகை தனது 41 ஆவது அகவையில் காலடி வைப்பதில் பெருமையடைகின்றோம். போர்க்காலத்தில் கூட இந்தப் பத்திரிகை தடங்குலும் இன்றி தொடர்ச்சியாக வெளிவந்தது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை மிகவும் ஆழமாக சர்வதேசம் வரைக்கும் கொண்டு செல்வதில் உதயன் துணிச்சல் மிக்கவன்.

இப்பத்திரிகையின் ஞாயிறு சஞ்சிவி வாரமலர் புதன் பொய்கை போன்றவற்றில் வெளிவரும் கட்டுரைகள்,கவிதைகள் செய்திகள், சிறுகதை, சினிமா, வெள்ளி நற்சிந்தனை ஆலயத் தரிசனம் அதனைவிட தினசரியாக வெளிவரும் "புதினம் தெரியுமோ" பட்சி வரை சிறப்புமிக்கவை.

சர்வதேசம் வரைக்கும் குரல் கொடுத்து வரும் இந்தப் பத்திரிகை தொடர்ந்தும் வெளிவர எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக. இந்தப் புனிதமான பணி என்றும் தொடரட்டும்.

**பா. நந்தகுமார்**
மூத்த ஊடகவியலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 02 . 1940



மறைவு 26 . 11 . 2025

**திருமதி பாலசிங்கம் பகவதி**

நீலியம்பனை மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் சிறுவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பாலசிங்கம் பகவதி அவர்கள் நேற்று (26.11.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் பகீரதன் (ஆசிரியர் வ/முஸ்லிம் மகா வித்தியாலயம்), பாமலோஜினி (ஆசிரியை பு/உடப்பு தமிழ் .மகா வித்தியாலயம், கனடா), பிரதீபன் (ஆசிரியர் யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், அபர்ணா (வைத்திய நிபுணர் மாவட்ட பொது வைத்தியசாலை மன்னார்), வதனசீலன் (கனடா), சங்கீதா (யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை), ஆகியோரின் அன்பு மாமியாரும், குபேரா, ஆகிஷா,அகில், நிலாவன் ஆகியோரின் பேர்த்தியும்,காலஞ்சென்றவர்களான பூபதி, சுப்ரமணியம், கந்தசாமி மற்றும் இராமுப்பிள்ளை, சேதுபதி, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்



# பூநகரியில் காற்றாலைகள்: அமைச்சர் குழு கள ஆய்வு

கிளிநொச்சி,நவ.27

கிளிநொச்சி பூநகரி வேரவில் பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை தொடர்பாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் கள விஜயம் மேற்கொண்டு ஆராய்ந்தனர். குறித்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி குழுவினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கடற்றொழில் அமைச்சரின் செயலாளர் மருங்கன் மோகன், மாவட்டச்செயலர் எஸ். முரளிதரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அவர்கள் தெரிவிக்கையில்,


பூநகரி வேரவில் முனைப் பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் அமைக்கப்பட உள்ள காற்றாலையின்மூலம் பாதிப்புகள் ஏற்படுமாயின் அப்பகுதி மக்களுக்கான நஷ்ட ஈட்டினையும் வழங்குவது அல்லது அவர்களுக்கு மாற்று இடங்களை வழங்குவது குறித்து சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்படும்- என்றார். (ச-113)

# தங்கம் விலை கிடுகிடு உயர்வு

உலக சந்தையில் தங்கத்தின் விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் தங்கத்தின் விலை மீண்டும் கணிசமாக அதிகரித்துள்ளது.

இலங்கையில் தங்கத்தின் விலை கடந்த திங்கட்கிழமை விலையுடன் ஒப்பிடும்போது நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ரூ.6,000 அதிகரித்துள்ளது என்று சந்தைத் தரவுகள் தெரிவிக்கின்றன. அதன்படி ஒரு பவுண் 22 கரட் தங்கத்தின் விலை ரூ.309,200 ஆக பதிவாகியுள்ளது. 24 கரட் தங்கத்தின் விலை ரூ.336,0 00 ஆக அதிகரித்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு 20.09.1963

இறப்பு 25.11.2025

**முடியப்பு அல்பிரட் (தயா)**

கந்தரோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் (தயா) கடந்த 25.11.2025 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முடியப்பு - வியாகுலம் (திரவியம்) தம்பதியரின் அன்பு மகனும், மேரி ஜெசியின் அன்புக் கணவரும், சுரேக்கா (லண்டன்), ஜான்சலின், அகஸ்ரீன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செபரட்ணம் - எமல்டா தம்பதியரின் அன்பு மருமகனும், ஏனோஸ் அவர்களின் அன்புப் பேரனும், யோகராசா (தாசன்), காலஞ்சென்ற பெனடிற் ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும், சாந்தி, ரோகினி, கீதா, சுரேஸ், தயாளினி, சுகந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கந்தரோடை சங்குவேலி புனித குழந்தை யேசு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மல்வம் திருக்குடும்ப சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தரோடை, சுன்னாகம்.
077 2842 686

தகவல்:
குடும்பத்தினர்.

# எதிர்க்கட்சிகளின் பிளவு அரசைப் பலப்படுத்தும்!

## ஜெகத் விதாரண எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ.27

நாமல் ராஜபக்சவை இளவரசர் என்று நாங்கள் குறிப்பிடப் போவதில்லை. ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமாயின் எதிர்க்கட்சியினர் எம்முடன் இணையவேண்டும். இல்லையேல் அரசாங்கமே பலமடையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத் விதாரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் வெற்றியா, தோல்வியா என்பதைக்குறிப்பிடமுடியாது. பொதுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரதான எதிர்க்கட்சியான நாங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. ஆட்சிய திகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைய வேண்டும். இல்லையேல் அரசாங்கம் தான் பலமடையும்- என்றார். (ச-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 03 . 1934



மறைவு 25 . 11 . 2025

**முருகுப்பிள்ளை சிங்காரவடிவேலு (சண்முகம்)**

காந்தியூர் புலோலி தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை சிங்காரவடிவேலு (சண்முகம்) அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் பொன்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், பூபதி, சரோஜினி, செல்வராணி, சிவராணி (ஜேர்மனி), குகபரன் (லண்டன்), குகபாலன் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தங்கவேலு, நவரத்தினம் மற்றும் சிவநாதன் (ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), உதயராஜன் (ஜேர்மனி), வசந்தி (லண்டன்), சிவாஜினி ஆகியோரின்அன்பு மாமனாரும், நளினி (ஜேர்மனி), அரவிந்தரூபன் (UK), அரவிந்தராம் (கிராம உத்தியோகத்தர்), கஸ்தூரி (ஜேர்மனி), அனுசாந் (UK), அருண் (UK), தனோஜன் (மாணவன், யாழ் பல்கலைக்கழகம்), நிறோசாந் (மாணவன் SLIIT), கிருஷிகா (ஜேர்மனி), கினோஜன் (UK) மிதுனா (UK), கோபிகா (மாணவி , கொழும்பு மருத்துவ பீடம்), சாணுஜா, துவாரகன்(ஜேர்மனி), தக்ஷா (லண்டன்), நவராணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆர்த்திகா (ஜேர்மனி), ஆருகா (ஜேர்மனி), தஷ்விகா, அபினேஷ் (UK) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2025) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தியூர்.


(CR/46580) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 08 • 09 • 1964



உதிர்வு 29 • 10 • 2025

கடந்த (29.10.2025) புதன்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புக் குடும்பத் தலைவர்


## அமரர் வல்லிபுரம் நவலோகநாதன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (26.11.2025) புதன்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (28.11.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மதியபோசன நிகழ்வு முற்பகல் 11.00 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர். (CS/60072) J-1

குடும்பத்தினர்
077 526 3630

# மரண அறிவித்தல்



தோற்றம்:06.10.1957 மறைவு:26.11.2025

## குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா

யாழ். நீராவியடியை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது யமுனா வீதி, செட்டியார் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று (26.11.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து குமாரசாமி அன்னலட்சுமி தம்பதியரின் பாசமிகு இளைய மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31 செல்லர் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (27.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 30809) A

## மொழிப் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்!

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையில் மொழிப் பாலத்தைக் கட்டியெழுப்புவதற்கான இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதிநாள் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிகசெயலாளர் மதுமதி வசந்தகுமார், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இ.நளாஜினி, அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர், திணைக்கள உத்தியோகத்தர்கள், தெரணியகல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த இளையோர் பங்கு பற்றினர். (ச-55)

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 • 06 • 1945



மறைவு 24 • 11 • 2025

## திருமதி கணேசமூர்த்தி பத்மாவதி

வரணியைப் பிறப்பிடமாகவும் குடமியன் வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேசமூர்த்தி பத்மாவதி (24.11.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், மீனவேணி, ஜெயவேணி, கமலவேணி, கலைவாணி, கருணாகரன், பத்மவேணி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பாஸ்கரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், குமாரவேலு, சுத்தானந்தன், நகுலேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், வித்தியாசர், கிருத்திகன், விதூசிகா, அபிராமி, பிரியங்கா, அபிஷா, கேரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2025) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குடமியன் வரணி

தகவல்: குடும்பத்தினர்
077 601 9284

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 • 08 • 1944



மறைவு 26 • 11 • 2025

## சின்னத்தம்பி திருமேனி

ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கு அன்னங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி திருமேனி நேற்று 26.11.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னி தம்பதிகளின் மருமகனும், பஞ்சாட்சரத்தின் கணவரும், காலஞ்சென்ற திவ்வியமணி மற்றும் பத்மாவதி, திருச்செல்வம், பத்மலிங்கம், திவ்வியநாயகம், திவ்வியராணி, திவ்வியமலர், சித்திராதேவி, திவ்வியமாலா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திலீபனின் பாசமிகு தந்தையாரும், சந்திரகலாவின் மாமனாரும், கலைச்செல்வன், தனேஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.11.2025 வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு
அன்னங்கையை

தகவல்:
குடும்பத்தினர்

(CS 60011) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை...

இன்றைய நாள், ஆயிரமாயிரம் அக்கினிப்பந்துகளாக, எரிநட்சத்திரங்களாக தம்மை மாற்றிக்கொண்டவர்களை நினைந்துருகும் நாள். தமிழினத்தின் இருப்புக்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை தமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நிறுத்தி தமிழர்கள் நினைவுகூரும் நாள். தமிழர் தாயகம் சுதந்திரத் தாகம் கொண்டுஎழுச்சிகொள்ளும் மகத்தான நாள். தமிழர் தாயகத்தின் விடிவுக்காகவும் தமிழர் விடுதலைக்காகவும் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய வீரர்களை தமிழர்கள் தங்களின் இதயக்கோவில்களில் நிறுத்திபூசிக்கும் நாள்.

எதையும் தாங்கும் இதயத்துடன் சாவுக்கு அஞ்சாத வீரத்துடன் சாவைத் தழுவியவர்கள்தான் மாவீரர்கள். அவர்களின் துயிலுமில்லங்கள் தாயகத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அல்லது சீரழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தரைமட்டமாக்கப்பட்ட துயிலுமில்லங்களின் எச்சங்களை மீட்டெடுத்து இன்றைய மாவீரர் நாளை எழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தாயக தேசம் தயாராகியுள்ளது.

வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள்பட்டொளி வீசிப்பறக்கின்றன. மாவீரர் அலங்கார வளைவுகள் மிடுக்குடன் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம், உடுத்துறை, சாட்டி ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் ஏற்பாடுகள் முழுமையடைந்துள்ளன. இதனை விடவும், நல்லூரில் தியாகதீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு அமைந்துள்ள நினைவாலயத்தில் மாவீரர்நாள் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லம், ஏராவில் மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றிலும் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவுக் கடற்கரை, இரட்டைவாய்க்கால், தேவிபுரம், களிக்காடு, கொக்குத்தொடுவாய், சுதந்திரபுரம், அலம்பில், வன்னிவிளான்குளம், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளிலுல் அமைந்துள்ள மாவீரர் நினைவாலயங்களிலும் மாவீரர்நாள் நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன. (அ-ம-26)

## பிரபாகரனின்...

பகுதியான வல்வெட்டித்துறை ஆலடி பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்துக்கு முன்பாக காலை 10 மணியளவில் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, சிறுவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும், கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட மக்களுக்குத் தென்னங் கன்றுகளும் வழங்கப்பட்டன. வல்வெட்டித்துறைநகரசபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தமிழ்த்தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் இந்தக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

இதேவேளை, பருத்தித்துறை சுப்பர் மடம்பகுதியிலும் இளைஞர்கள்மற்றும் ஊர் மக்களின் ஏற்பாட்டில் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

மாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கொண்டாட்டங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26,100)

## எழுவருக்கு...

வாழ்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், கடந்த பத்து நாள்களில் போதைப்பொருள்களுடன் எட்டுப் பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில்ஏழுபேர்போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனன்பது மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்தது. இதையடுத்தே, அவர்களை மறுவாழ்வுக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-27)

## ஐஸ்...

நச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்தகைதுநடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்களிடம் இருந்து 290 மில்லிகிராம் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-26)

## காய்ச்சலால்...

மன்னார் உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த காளிமுத்து நித்தியாஸ் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

கடந்த 24ஆம்திகதி அந்தச்சிறுவனுக்கு காய்ச்சலும், பின்னர் வலிப்பும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட சிறுவனை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றியுள்ளனர். எனினும், நேற்றுமுன்தினம் இரவுமேலதிகசிகிச்சையின்போது அந்தச்சிறுவன் உயிரிழந்துள்ளான். இறப்புக்கான காரணம் தெரியவராத நிலையில், உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## அத்துமீறிய....

கவனத்துக்கு ஏற்கனவே கொண்டு சென்றிருந்தனர்.

இதையடுத்து, வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அத்துமீறி புத்தர்சிலையைப் பிரதிஷ்டை செய்தபிக்குவையும், அவருடன் இருந்தவர்களையும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக மாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-50)

## குருதிக்கொடை...

ஊடாக முன்னெடுக்கப்பட்ட 83ஆவது இரத்ததான முகாம் நேற்று 26ஆம் திகதி புதன்கிழமை வல்வெட்டித்துறையில் இடம்பெற்றுள்ளது.

மிகுந்தசிரமங்களுக்கு மத்தியில் இரத்ததான முகாம்களை ஒருங்கிணைத்து முன்னெடுத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்தில் தற்போது பெரும் குருதித்தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதனை ஈடுசெய்வதற்கு பெரும் பிரயத்தனங்களுக்கு மத்தியில் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்தோம். ஆனால், இந்தப் பணிகளுக்கு புலனாய்வுத் துறையால் பெரும் நெருக்குவாரங்கள் வழங்கப்படுகின்றன.

குறித்த இரத்ததான முகாம் ஆரம்பமானது முதல் வல்வெட்டித்துறை பொலிஸ் தரப்பு தொடங்கி புலனாய்வுப் பிரிவினர் வரை மாறிமாறி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எமக்கு மன உளைச்சலைத் தரும் வகையில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கெடுபிடிகள் தொடர்ந்து வழக்கு தொடுக்கப்படுமாக இருந்தால் அந்த நாளுடன் இரத்ததான சேவையில் இருந்து முற்றாக விலகிவிடுவேன் - என்றார். (அ-ம-100)

## அம்பாறையை...

லைத்தீவை அண்மிப்பதற்கு வாய்ப்புள்ளது இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வங்கக் கடலில் இலங்கைக்கு அருகாக உருப்பெற்றதாழமுக்கம்தற்போது அம்பாந்தோட்டைக்கு தென்கிழக்காக 70 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டுள்ளது. இது இன்று காலை அம்பாறை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து கிழக்குக் கரையோரமாக நகர்ந்து எதிர்வரும் 28ஆம் திகதி மட்டக்களப்புக்கு மிக அண்மையாகவும், 29ஆம் திகதி திருகோணமலைக்கு அண்மையாகவும், பின்னர் முல்லைத்தீவுக்கு அண்மையாகவும் நிலைகொள்ளும் வாய்ப்புள்ளது.

ஏற்கனவே மலாக்கா நீரிணைக்கு அருகில் தோன்றியுள்ள புயலுக்கு 'சென்யார்' எனப் பெயரிடப்பட்டுள்ளமையால், இந்தத் தாழமுக்கம் புயலானால் அதற்கு யேமன் நாடு பரிந்துரைத்தபடி 'டித்வா' எனப் பெயரிடப்படும்.

இந்த தாழமுக்கம் காரணமாக கிழக்கு மாகாணம் தொடர்ச்சியாக மழைபெற்று வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மழை தொடரும் வாய்ப்புள்ளது. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு நேற்று மழை கிடைத்துள்ளது.

எதிர்வரும் நாள்களில் வடக்கு மாகாணத்தில் மழை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கும். வடக்கு மாகாணத்தில் 28ஆம், 29ஆம் மற்றும் 30ஆம் திகதிகளில் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என்றார். (அ-ம-26)

## உத பரீட்சை...

காவுகை செய்யப்பட்டுவந்தன. அசாதாரண காலநிலை காரணமாக, நேற்றைய தினம்படகுமூலம்விடைத்தாள்களைக் காவுகை செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டது. இதையடுத்தே, நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இருந்து ஹெலிகொப்டர்மூலம் விடைத்தாள்கள் கொண்டுசெல்லப்பட்டன. (அ-ம-26)

## தமிழினத்தின்...

வித்ததாவது:

'ஆழக் கடல் எங்கும், சோழ மகாராஜன்
ஆட்சிபுரிந்தானே அன்று
தமிழீழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன் ஏறி நடக்கின்றான் இன்று
காலை விடிந்ததென்று பாடு
சங்க காலம் திரும்பியது ஆடு'

தமிழினத்தின் தேசியத் தலைவனது ஆட்சியை வடக்கு, கிழக்குத்தமிழர்தாயகப்பரப்பில் வாழ்ந்த தமிழ் மக்கள் இவ்வாறாகத்தான் கொண்டாடினார்கள்.

மேதகுவின் ஆட்சியில் கடலிலே இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்களும் அடாவடிகளும் இருக்கவில்லை. சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் இருக்கவில்லை. மீனவர்கள் மகிழ்ச்சியாகக் கடற்றொழிலில் ஈடுபட்டனர்.

காணி அபகரிப்புக்களும் இல்லை. எனவேதமிழர்தாயகம் விவசாயத்திலும் செழித்திருந்தது. போதைப் பொருள்கள் அறவே இல்லை. நள்ளிரவிலும் பெண்கள் சுதந்திரமாக உலவக்கூடிய நிலையிருந்தது. தாயகப்பரப்பில் மக்கள் தன்னிறைவு பெற்று பாதுகாப்பாக வாழ்ந்தனர். எனவேதான் தமிழ் மக்கள் மேதகுவை இறைவனாகவும், அவரது ஆட்சிக் காலத்தைச் சங்ககாலமாகவும் போற்றுகின்றனர்.

அந்தத் தமிழ் இனத்தின் இறைவனுக்கு இன்று பிறந்தநாள். இந்த உயரிய சபையிலே மேதகுவுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார். (அ-ம-26)

## எரிபொருள் நிலையங்களின் இருப்பை உறுதிப்படுத்துக!

யாழ்ப்பாணம்,நவ.27

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையைக் கருத்திற் கொண்டு, எரிபொருள் நிரப்பும் நிலையங்களின் எரிபொருள்களுக்கான கையிருப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மண்ணெண்ணெய் உட்பட சகல எரிபொருள்களையும் முன்கூட்டியே கையிருப்பில் வைத்துக் கொள்ளவும், இடர் நிலைமையைக் கருத்திற்கொண்டு நுகர்வோர் சிரமமின்றி எரிபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக, அனைத்து எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் இருப்பது அவசியம் என்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியுள்ளது. (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் இடத்தை திடீரென அடையாளப்படுத்துவதால் சிக்கல்

## ஸ்ரீநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

திருகோணமலை, நவ.27

நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமல் தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்துவது இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அம்பிட்டிய சுமனரத்ன தேரர் அடாவடிகளில் ஈடுபடுகின்றார். கெட்ட வார்த்தைகளைப் பேசி இன நல்லிணக்கத்தைக் குழப்புகிறார். இவ்வாறானவர்களின் தலையீடுகள் தொல்லியல் விடயங்களில் இருக்கும்போது இன நல்லிணக்கம் பாதிக்கப்படும். மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்லியல் இடங்களை அடையாளம் காணும் விடயத்தில் கடந்த காலங்களில் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அங்கு இப்போது உள்ளூராட்சிசபைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. உள்ளூராட்சிசபைகளின் மேற்பார்வை மற்றும் ஆளுகையில் அந்தக் காணிகள் இருக்கின்றன. திடீரென அங்கு தொல்லியல் இடங்களுக்கான பதாகைகள் அமைக்கும்போது முறுகல் நிலையொன்று ஏற்படுகின்றது. நாங்கள் சட்டத்தை மீறிச் செயற்பட விரும்பவில்லை சட்டத்தின்படி நடக்கவே விரும்புகின்றோம். ஆனால் இன நல்லிணக்கத்தை குழப்பக்கூடாது. உள்ளூராட்சி உறுப்பினர்கள், தலைவர்களை அழைத்து அதற்கான நடவடிக்கைளை முன்னெடுத்திருக்கலாம். இலங்கையர் தினத்தை ஐக்கியமாக கொண்டாடவுள்ளோம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால் இதுபோன்ற விடயங்கள் முரண்பாடுகளை ஏற்படுத்தும். பொறுப்பு வாய்ந்த அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளோம். அவர் பிரச்சினையின்றி இவற்றைத் தீர்ப்பார் என்று நம்புகின்றோம்-என்றார். (எ-இ)



# மாவீரர் பெற்றோர் விசுவமடுவில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் உரித்துடையோர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு புத்தடி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெற்றது. விசுவமடு மேற்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் இதன்போது மதிப்பளிக்கப்பட்டுள்ளார்கள். புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் உறுப்பினர் கு.அகிலன், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-இ)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களுக்கான பிரிவுபசார விழா பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் உப தலைவர் இ.இராஜசுதாகர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-41-9)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால், மலையகத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி அண்மையில் வழங்கப்பட்டது. (க-66)

# கனகபுரம் துயிலுமில்லத்துக்கு இன்று இலவச பேருந்து சேவை

கிளிநொச்சி,நவ.27

மாவீரர் நாளை முன்னிட்டு கனகபுரம் தூயிலுமில்லத்துக்கு இன்று தனியார் பேருந்துகள் இலவச சேவையில் ஈடுபடுவதுடன், துயிலுமில்ல முன் வீதி மாலை 4 மணிக்குப் பின்னர் மூடப்படும் என்று கரைச்சிப் பிரதேசசபையின் தவி சாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதை சீரற்ற காலநிலையால், இன்று அதிகளவான மழை பெய்யக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன என்று வளிமண்டலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர், உறவினர்கள் உரிய நேரத்துக்கு துயிலுமில்லத்துக்கு வருகை தந்து உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வீதி ஊடாகப் பயணிப்போர் மற்றும் வாகன சாரதிகள் மாலை 4 மணிக்குப் பின்னர், மாற்று வீதியைப் பயன்படுத்த வேண்டும். மக்களின் பாதுகாப்புக்காக பொலிஸாரின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் போக்குவரத்துச் சேவையினர் பரந்தனில் இருந்து பிற்பகல் 3 மணி தொடக்கம் மாவீரர் துயி லுமில்லம் செல்வோருக்கு இலவச பேருந்து சேவையை முன்னெடுக்கவுள்ளனர்.

டிப்போச் சந்தியில் இருந்தும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் இலவச பேருந்துச் சேவை முன்னெடுக்கப்படும்.

மக்கள் இந்தச் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை இன்று வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (க-113)

# சீரற்ற காலநிலையால் 10 பேர் உயிரிழப்பு

கொழும்பு,நவ.27

நாட்டில் 12 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் எழுவர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு , மரம் முறிவு மற்றும் வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்களாலேயே உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. மூன்று வீடுகள் முழுமையாகவும், 242 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. சீரற்ற காலநிலையால் 19 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் மூன்று தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)


## வேலையாட்கள் தேவை

இணுவிலில் அமைந்துள்ள பால்மா விநியோக நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- சாரதி - நாள் ஒன்றிற்கு - 1800/-
- கணக்காளர் (Data entry Operator) - ஆண், பெண் இருபாலாரும் சம்பளம் - மாதம் 35000 - 50000/- A/L, அடிப்படைக் கணனி அறிவு
- விற்பனைப் பிரதிநிதி - ஆண்

தொடர்புகளுக்கு:-
075 999 1465

(CS/60010) J-1


# தமிழரசுக் கட்சிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

திருகோணமலை, நவ.27

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு தொடர்பில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இடைபுகுநர் வருவதற்கு கொடுக்கப்பட்ட அவகாச காலத்துக்குப் பின்னர் பரமானந்தம் என்ற ஒருவர் விண்ணப்பம் செய்துள்ளார்.

இந்த விண்ணப்பம் காலாவதியான ஒன்று என எமது தரப்பு நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளது. இதுதொடர்பான ஆட்சேபனையைத் தாக்கல் செய்வதற்காகவே நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தோம். எமது ஆட்சேபனையின் பிரதான கருப்பொருள் என்னவென்றால், இந்த வழக்கைக் காலம் கடத்த எதிராளிகளால் காலம் கடந்து இடைப்புகுநர் என்ற ஒருவர் கொண்டுவரப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளார். எனினும் மாவட்ட நீதிபதி விடுமுறையில் இருப்பதால் வழக்கு எதுவும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. இதன் காரணமாக வழக்கானது எதிர்வரும் ஆண்டு மார்ச் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (எ-இ)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org